தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தொடரும் மழை: பெரியாறு, வைகை அணைகளில் நீர்மட்டம் அதிகரிப்பு



**மதுரை,**

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால், வியாழக்கிழமை ஒரே நாளில் மட்டும் பெரியாறு அணையில் 3 அடியும், வைகையில் 1 அடியும் நீர்மட்டம் உயர்ந்தது.

கடந்த இரண்டு வாரங்களாக தமிழக எல்லையை ஒட்டியுள்ள கேரள மாநிலப் பகுதியில் பெய்த கன மழையால், பெரியாறு அணைக்கு தண்ணீர் வரத்து இருந்தது. இதனால், அந்த அணையின் நீர்மட்டம் நிலைப்படுத்தப்பட்டு வந்தது. வைகையிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாத சூழல் உருவானதைத் தொடர்ந்து, பெரியாறிலிருந்து 5 நாள்களுக்கு முன்பு 100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. பெரியாறுக்கு மேலும் தண்ணீர் வரத்து அதிகரித்ததால், 3 நாள்களுக்கு முன்பு வைகை அணைக்கான தண்ணீர் திறப்பு 250 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இத் தண்ணீருடன், தேனி மாவட்டம் மற்றும் மூலவைகை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் 2 நாள்களாக மழை பெய்து வந்ததால் கிடைத்த தண்ணீரும் சேர்ந்து வைகை அணைக்கு புதன்கிழமை மாலை முதல் 272 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது.

இதைத் தொடர்ந்து வைகை அணையின் நீர்மட்டம் 1.05 அடி உயர்ந்து, வியாழக்கிழமை காலை 8 மணியளவில் 22.11 அடியாக இருந்தது. அணையின் கொள்ளளவு 140 மில்லியன் கன அடியாக இருந்தது.

அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால், இரு அணைகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. வியாழக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி, பெரியாறு அணைக்கு வினாடிக்கு 6,649 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 3.03 அடி உயர்ந்து, 114.40 அடியாக இருந்தது. அணையில் 1,625 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியிருந்தது. தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால், பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதைத் தொடர்ந்து, வைகை அணைக்கான தண்ணீர் திறப்பு வினாடிக்கு 250 கன அடியிலிருந்து, 500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், வைகை அணையின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது. அதேசமயம், குடிநீருக்கான தண்ணீர் திறப்பு வினாடிக்கு 40 கன அடியாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

## தொடரும் மழை: உயர்கிறது அணைகளின் நீர்மட்டம்



**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் 3-ஆவது நாளாக வியாழக்கிழமையும் பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் குண்டாறு, அடவிநயினார், கருப்பாநதி அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. பாபநாசம், மணிமுத்தாறு

அருவிகளில் வெள்ளத்தின் சீற்றம் குறையாததால், சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படவில்லை. தொடரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 3-ஆவது நாளாக வியாழக்கிழமையும் பலத்த மழை பெய்தது. தென்காசி, சங்கரன்கோவில், வள்ளியூர், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி, களக்காடு, முக்கூடல் உள்பட அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக மழை நீடித்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை-20, பாபநாசம் கீழ் அணை-15, சேர்வலாறு அணை-9, மணிமுத்தாறு அணை-52.8, ராமநதி அணை-6, குண்டாறு அணை-13.3, அடவிநயினார் அணை-25, வடக்குப் பச்சையாறு அணை-14.4, நம்பியாறு அணை-61, கொடுமுடியாறு அணை-10.

கணிசமாக நீர்வரத்து: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நீடிப்பதால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 1,219 கன அடியும், மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு 669 கன அடியும், கடனாநதி அணைக்கு வினாடிக்கு 25 கன அடியும், ராமநதி அணைக்கு வினாடிக்கு 106 கன அடியும், கருப்பாநதி அணைக்கு வினாடிக்கு 212 கனஅடியும், குண்டாறு அணைக்கு வினாடிக்கு 69 கன அடியும், வடக்குப் பச்சையாறு அணைக்கு வினாடிக்கு 113 கன அடியும், நம்பியாறு அணைக்கு வினாடிக்கு 37.60 கன அடியும், கொடுமுடியாறு அணைக்கு வினாடிக்கு 10 கன அடியும் நீர்வரத்து இருந்தது.

உயரும் நீர்மட்டம்: அணைகளுக்கு நீர்வரத்து இருப்பதால் குறைந்த கொள்ளளவு உள்ள அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. ராமநதி அணை நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 61 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 45.28 அடியாகவும், 36 அடி கொள்ளளவு உள்ள குண்டாறு அணை நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 32.47 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 10 அடி உயர்ந்து 40 அடியாகவும் இருந்தது. வறண்டு காணப்பட்ட வடக்குப்

பச்சையாறு அணை நீர்மட்டம் 7 அடியும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் ஓரடியும் உயர்ந்துள்ளது.

அருவிகளில் வெள்ளம்: மணிமுத்தாறு, பாபநாசம், பாபநாசம் கீழ் அணை பகுதிகளில் மழை நீடிப்பதால் பாபநாசம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளில் வியாழக்கிழமை 2-ஆவது நாளாக வெள்ளப்பெருக்கு இருந்தது. பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மணிமுத்தாறு அருவியில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அகஸ்தியர் அருவியில் 4 கிளையிலும் தண்ணீர் விழுகிறது.

அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்திருப்பதால் ஜூன் மாதத்தில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும்வரை திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்யலாம் என, அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## அரபிக் கடலை நோக்கி நகர்ந்தது காற்றழுத்த தாழ்வு நிலை: கன மழைக்கு வாய்ப்பு

**சென்னை,**

குமரிக் கடல் பகுதியில் உருவான காற்றழுத்தத் தாழ்வு பகுதி நகர்ந்து தற்போது அரபிக் கடலின் தென் பகுதியில் நிலைகொண்டிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை (மே 9) கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் மழை பெய்யலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:

வங்கக் கடலில் அண்மையில் உருவான காற்றழுத்தத் தாழ்வு பகுதி, முதலில் மேற்கு நோக்கி நகர்ந்தது. பின்னர் வட கிழக்கில் நகர்ந்து கேரளக் கடல் பகுதியில்

நிலைகொண்டுள்ளது. இது வலுவடைந்து நகரும் திசையைப் பொருத்தே தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்யுமா என்பதைக் கணிக்க முடியும்.

தற்போது உள்ள நிலவரப்படி உள்மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வியாழக்கிழமை காலை வரை அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 130 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சிதம்பரம், குன்னூரில் 120 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

இதைத் தவிர திருவாரூர், தூத்துக்குடி, அரியலூர், கோவை, திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை, ஈரோடு, திருப்பூர், கன்னியாகுமரி உள்பட மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது.

அக்னி வெயில் உச்சத்தில் உள்ள நிலையில் காற்றழுத்தத் தாழ்வு பகுதி காரணமாக மாநிலத்தின் வெப்பநிலை வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவித்தார் அவர்.

## பெரியாறு அணை மதகுகளை கீழே இறக்க பாசன விவசாயிகள் அரசுக்கு வேண்டுகோள்

**மதுரை,**

உச்சநீதிமன்ற உத்தரவின்படி முல்லைப் பெரியாறு அணையில் 142 அடிக்கு தண்ணீரைத் தேக்க, மதகுகளை கீழே இறக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பெரியாறு வைகை பாசன திட்டக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. பெரியாறு வைகை பாசன திட்டக்குழு சார்பில் அதன் உறுப்பினர்கள் எம்.முகைதீன், ஜி.முருகன், ஆர்.அருள்பிரகாசம் உள்ளிட்டோர் மதுரை மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் இதற்கான மனுவை வியாழக்கிழமை அளித்தனர்.

பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ள உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆகவே, அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அணையின் மதகுகளை கீழே இறக்க அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

பென்னிகுயிக் சிலைக்கு மரியாதை: மதுரை தல்லாகுளத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் முல்லைப் பெரியாறு அணையைக்

கட்டியதன் நினைவாக பென்னிகுயிக் சிலை நிறுவப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணை பிரச்னையில் உச்சநீதிமன்றத்தில் தமிழகத்துக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்துள்ளதை பொதுப்பணித்துறை பொறியாளர்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர். மேலும் பென்னிகுயிக் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சிலையின் அருகே பென்னிகுயிக் உருவப்படம் வைக்கப்பட்டு பொதுப்பணித்துறையினரால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

## 4ஆவது நாளாக மழை திண்டுக்கல்லில் 2 மணி நேரம் பெய்தது

**திண்டுக்கல்,**

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானதை அடுத்து, திண்டுக்கல் பகுதியில் தொடர்ந்து 4ஆவது நாளாக மழை பெய்தது. வியாழக்கிழமை பிற்பகலில் தொடர்ந்து 2 மணி நேரம் பெய்த பலத்த மழையால் சாலைகளில் ஆறாக தண்ணீர் ஓடியது.

திண்டுக்கல்லில் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி அளவில் லேசான சாரலுடன் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. சிறிது நேரத்தில் சாரல் வலுவான மழையாக மாறியது. இதனால், இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள், ஆங்காங்கே வாகனத்தை நிறுத்திவிட்டு ஒதுங்கினர்.

மழை தீவிரம் அடைந்ததால், எதிரே வரும் வாகனங்கள் தெரியாத நிலை ஏற்பட்டது. இதனால், மதுரை மற்றும் திருச்சி செல்லும் நான்கு வழிச் சாலையில்(திண்டுக்கல் அஞ்சலி ரவுண்டானா பகுதி) செல்லும் கார்கள், லாரிகள் மற்றும் பேருந்துகள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடியே மிதமான வேகத்தில் சென்றன.

சாலைகளில் பெருக்கெடுத்து ஓடிய மழை நீர்: இந்த மழையால், திண்டுக்கல் ஆர்.எம். காலனி பிரதான சாலை, தாடிக்கொம்பு சாலை, கரூர் சாலை ஆகிய பகுதிகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், இரு சக்கர வாகன ஓட்டிகள் மட்டுமின்றி, கார் மற்றும் பேருந்து ஓட்டுநர்களும் சிரமத்துடன் வாகனத்தை மெதுவாக ஓட்டிச் சென்றனர். ஆர்.எம். காலனி 1ஆவது கிராஸ் பகுதியில், மழைநீருடன் கழிவுநீரும் கலந்து சாலையில் தேங்கியது. சில தாழ்வான இடங்களில் வீடுகளுக்குள் புகுந்த மழை நீரை, மணல் மூலம் தாற்காலிக

தடுப்புகளை ஏற்படுத்தி தடுத்தனர். இதேபோல், ஆர்.எம். காலனி மின்மயானம் அருகில் பிரதான சாலையில், மழைநீர் தேங்கி நின்றதால், சாலையின் வலதுபுறமாகவே அனைத்து வாகனங்களும் சென்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:

திண்டுக்கல்-15.40, கொடைக்கானல்-69.20, நத்தம்-32.50, நிலக்கோட்டை-41.20, பழனி-6, வேடசந்தூர்-28.05, சத்திரபட்டி-13.50, வேடசந்தூர் புகையிலை மையம்-29.06, கொடைக்கானல் போட் கிளப்-97.50, காமாட்சிபுரம்-23.80. மொத்தம் 356.21 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

## நத்தம் பகுதியில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**நத்தம்,**

நத்தம் பகுதியில் பெய்துவரும் கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் கடந்த வாரம் முதல் கோடை மழை பெய்து வருகிறது. இப்பகுதி முற்றிலும் விவசாயம் சார்ந்த பகுதியாகும். மா, தென்னை, புளி, கொய்யா உள்ளிட்ட பலன் தரும் மரங்கள் பெருமளவில் இங்கு பயிரிடப்படுகின்றன. இவைதவிர மானாவாரியாக சோளம், மொச்சை, கேழ்வரகு, உளுந்து, எள், பருத்தி போன்ற பயிர்வகைகள் பயிரிடப்படுகின்றன. கடந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யவில்லை. இதனால் கடந்த 3 மாதங்களாக அதிக அளவு வெப்பத்தால் தென்னை, மா மரங்கள் பட்டுப்போகும் அளவுக்கு வறட்சி ஏற்பட்டது.

இந்நிலையில் விவசாயிகள் பயிர்களைக் காப்பாற்ற தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சி வந்தனர். அக்னி நட்சத்திரம் தொடங்கியது முதல் அனல் காற்று அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடீரென கோடை மழை பெய்யத் தொடங்கியது. நத்தம் பகுதியில் மிதமானது முதல் கனமான மழை பெய்தது. இந்த மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசுகிறது. இதனால் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த மழை இன்னும் சில நாள்கள்

நீடிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். அதன் மூலம் கண்மாய், குளங்களில் நீர் நிறையும் என கருதுகிறார்கள்.

இதுகுறித்து இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், கோடை மழை பெருமழையாக இல்லாமல் சாரலாக அவ்வப்போது பெய்தது. இதனால் அக்னி வெயில் தணிந்துள்ளது. பூமி குளிர பெருமழை பெய்ய வேண்டும். இதன்மூலம் தென்னை, மா மரங்கள் மீண்டும் உயிர்பெறும். என்றாலும் தற்போது உள்ள நிலைமைப்படி வறட்சி நிலை மாறி பசுமையாக பலன்தரும் மரங்களும் மானாவாரி பயிர்களும் காணப்படுகிறது என்று அவர்கள் கூறினர்.

## முல்லைப் பெரியாறு அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு வைகை அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்வு

**ஆண்டிபட்டி,**

தேனி மாவட்டத்தில் பெய்யும் புயல் மழை மற்றும் பெரியாறு அணையின் தண்ணீர் திறப்பு அதிகரிப்பால் வைகை அணையில் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்துள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக போதிய மழை இல்லாததால் வைகை அணைக்கு போதிய அளவு நீர் வரத்து இல்லை. இதனால் வைகை அணையின் நீர் மட்டம் கடந்த செவ்வாய்கிழமை 21 அடியை எட்டியது. இதில் 20 அடியில் சேறு தேங்கியுள்ளதால் 1 அடி தண்ணீர் வைத்து மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டு குடிநீர்த் திட்ட பகுதிகளுக்கு இரண்டு நாள்கள் மட்டுமே தண்ணீர் விநியோகம் செய்யும் நிலை ஏற்பட்டது. அதன் பின் தண்ணீரை நிறுத்தும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தேனி மாவட்டம் மற்றும் முல்லை பெரியாறு அணை பகுதியில் பரவலாக மழை பெய்ய ஆரம்பித்தது. இதனால் பெரியாறு அணையின் நீர்மட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. அங்கிருந்து விநாடிக்கு 200 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட ஆரம்பித்தனர்.

இதனால் வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. இந்த நிலையில், தேனி மாவட்டம் மற்றும் முல்லை பெரியாறு அணை பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு மற்றும் வியாழக்கிழமை நல்ல மழை பெய்ய துவங்கியது. இதனால் முல்லை

பெரியாறு அணைக்கு விநாடிக்கு 6649 கன அடி வீதம் தண்ணீர் வரத்து அதிகரிக்க துவங்கியது. இதனால் அங்கிருந்து கூடுதலாக 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேலும் தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், வியாழக்கிழமை முதல் வைகை அணைக்கு 740 கனஅடியாக தண்ணீர் வரத்து அதிகரிக்க துவங்கியது. இதனால் வைகை அணையின் நீர் மட்டம் வியாழக்கிழமை அன்று ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது. மூல வைகை ஆற்று தண்ணீர் வைகை அணையை வந்தடைந்தால், வைகை அணையின் நீர் மட்டம் மேலும் உயரும். பொதுப்பணித் துறையினர் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தற்போது தண்ணீர் வரத்தால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதே நிலை நீடித்தால் கோடையில் தண்ணீர் பிரச்னையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

## பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை

**தேனி,**

பெரியாறு அணை நீர்ப்பிடிப்புப் பகுதியில் கனமழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

பெரியாறு அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 114.40 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 6,649 கனஅடி. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் 35 மி.மீ., தேக்கடியில் 51.4 மி.மீ., மழை அளவு பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையால், கொட்டகுடி ஆறு மற்றும் மூல வைகை ஆற்றில் தண்ணீர் வரத்து உள்ளது.

வைகை அணை நீர்மட்டம் 22.11 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 272 கனஅடி. அணையில் இருந்து விநாடிக்கு 40 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 85.60 அடியாகவும், அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 257 கன அடியாகவும் இருந்தது. மஞ்சாளாறு அணை நீர்மட்டம் 30.60 அடி. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 60 கனஅடி. சண்முகாநதி நீர்த் தேக்கத்துக்கு விநாடிக்கு 28 கனஅடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது.

**<u>திருப்பத்தூர் பகுதிகளில் மழை நீடிப்பு</u>**

**திருப்பத்தூர்,**

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா பகுதியில் 2 நாள்களாக மழை பெய்து வருவதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திருப்பத்தூர் பகுதிகளில் மழை நீடித்து வருவதால் பூமி குளிர்ந்து, மக்கள் மனமகிழ்ச்சியுடன் கோடை விவசாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். சிங்கம்புணரி, காளாப்பூர், மாங்குடி போன்ற பகுதிகளில் கருகிய நிலையில் உள்ள தென்னை மரங்கள் உயிர் பெற வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். கடந்த 2 நாள்களாக பெய்து வரும் தொடர் மழையால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஒடி பள்ளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. மேலும் வறண்டு போன கண்மாய்களிலும், குளங்களிலும் தண்ணீர் பெருக தொடங்கியதால் கால்நடைகளின் தண்ணீர் தேவையும் பூர்த்தியாகியுள்ளது. விவசாயிகளும் மகிழ்ச்சியுடன் கோடை உழவுப் பணியை தொடங்கியுள்ளனர்.

**<u>மாவட்டத்தில் பலத்த மழை: சராசரியாக 50 மிமீ பதிவு</u>**

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் புதன்கிழமை பலத்த மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதிலும் சராசரியாக 50.6 மிமீ மழை பதிவாகி உள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தம் காரணமாக கடந்த மே மாதம் 1ஆம் தேதி முதல் சிவகங்கை மாவட்டத்தில் பல இடங்களிலும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் கடந்த மே 4 ஆம் தேதி முதல் புதன்கிழமை வரை மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது.

வியாழக்கிழமை காலை 9 மணி வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம்.

காரைக்குடி 41.2மிமீ., மானாமதுரை 60, சிவகங்கை 66, திருப்புவனம் 58.2, திருப்பத்தூர் 35, இளையான்குடி 47, தேவகோட்டை 47.2மிமீ. சராசரி மழையளவு

50.6 மிமீ. மே மாதம் 1 ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை மாவட்டத்தில் புதன்கிழமை வரை பதிவான மழை அளவு விவரம்.

காரைக்குடி 133.4மிமீ., மானாமதுரை 175மிமீ., சிவகங்கை 161.2மிமீ, திருப்புவனம் 143.2, திருப்பத்தூர் 106.2, இளையான்குடி 146.4, தேவகோட்டை 120.6மிமீ. மாவட்டத்தில் சராசரி மொத்த மழையளவு 140.85 மிமீ.

## தேவகோட்டையில் கனமழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**தேவகோட்டை,**

தேவகோட்டை தாலுகா பகுதிகளில் கடந்த மூன்று நாள்களாக பலத்த மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேவகோட்டை தாலுகாவில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து வறட்சி நிலவியதால் விவசாயிகள் கவலை அடைந்தனர். நிலத்தடி நீர் வற்றி கிணறுகளிலும் குளங்களிலும் நீர் மட்டம் குறைந்ததால் விவசாயம் செய்ய முடியாமல் கவலை அடைந்தனர்.

இந்நிலையில் தேவகோட்டை தாலுகா சிறுவத்தி, பெருவத்தி, இளங்குடி, பாவனக்கோட்டை, ஆறாவயல், எழுவன்கோட்டை போன்ற கிராமங்களில் 3 நாள்களாக பலத்த மழை பெய்தது.

புதன்கிழமை இரவு தேவகோட்டை தாலுகாவில் 44 மி.மி மழை பதிவானது. அதனை தொடர்ந்து வியாழக்கிழமை பகலிலும் மழை பெய்தது. தொடர் மழையால் விவசாயத்துக்கு தேவையான நீர் கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கடலில் மீன்களை கூண்டில் வளர்க்கும் முறையைப் பின்பற்றுங்கள்

**ராமேசுவரம்,**

மீனவர்களின் வாழ்வாதாரம் முன்னேற, கடலில் கூண்டுகள் அமைத்து மீன்கள் வளர்க்கும் முறையை பின்பற்ற வேண்டும் என்று ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் வேண்டுகோள்விடுத்தார். ராமேசுவரம் பகுதி மீனவர்கள் மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியோடு மரைக்காயர்பட்டினம்

பகுதியில் கடலில் கூண்டில் வைத்து வளர்க்கப்பட்ட மீன்களை விற்பனைக்காக அறுவடை செய்யும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது. அறுவடை செய்யப்பட்ட மீன் விற்பனையை வியாழக்கிழமை துவக்கிவைத்து மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் பேசியதாவது:

மரைக்காயர் பட்டினம் பகுதியில் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மீனவர்களின் வாழ்வாதரம் சிறக்க பல்வேறு திட்டங்களை அறிவித்து அதற்கான பயிற்சியையும் அளித்து வருகிறார்கள். பாக்ஜலசந்தி கடல் பகுதியில் மீன்களின் இனப்பெருக்கம் குறைந்து வருகிறது. மேலும் எல்லை தாண்டிவிடுவதால் பல்வேறு பிரச்னைகளையும் மீனவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

மீனவர்களின் வாழ்வாதாரத்துக்காக மத்திய அரசு பல புதிய திட்டங்களை வகுத்து வருகிறது. மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் அப்பகுதி மீனவர்களுக்கு கடலில் கூண்டு அமைத்து மீன் வளர்க்கும் முறையில் பயிற்சி கொடுத்தனர். இந்த பயிற்சியில் 21 மீனவர்கள் பங்கேற்று மண்டபம் தென்கடல் பகுதியில் கூண்டு அமைத்து கோபியா என்ற வகை மீன்களை வளர்த்து வந்தனர். அந்த மீன்கள் நன்கு வளர்ச்சியடைந்ததால் அவை இப்போதோ அறுவடை செய்யப்பட்டுள்ளன. முதன் முதலில் மீன்வர்கள் கடலில் கூண்டு அமைத்து வளர்க்கப்பட்ட மீன்கள் இவை.

இப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் வளர்ச்சியடைய கடலில் மீன்களை கூண்டி வளர்ப்பு முறையை பின்பற்ற வேண்டும் என அப்போது மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

அதற்கு முன்னதாக ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பிளாஸ்டிக் படகு மூலம் கடலில் ஒரு மைல் நாட்டிக்கல் தொலை தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த கூண்டில் மீன் வளர்க்கும் முறையை அவர் பார்வையிட்டார்.

மேலும் நிகழ்ச்சியில் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி கோபகுமார், தமிழக மீன்வளத் துறை இயக்குநர் கார்த்திகேயன், ராமேசுவரம் மீனவ சங்க நிர்வாகிகள் என்.ஜே.போஸ், தேவதாஸ், எமரிட்,ஜேசுராஜ் உள்பட 200க்கு மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் தொடர் மழை

**திருப்பூர்,**

திருப்பூர் மாவட்டத்தை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் கடந்த 2 நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம், அவிநாசி, தாராபுரம், காங்கயம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2 நாள்களாக தொடர்மழை பெய்து வருகிறது. மேலும், திருப்பூர் மாநகர் பகுதியில் வியாழக்கிழமை காலை முதல் தொடர்ந்து சாரல் மழை விட்டு, விட்டு பெய்து கொண்டிருந்தது.

திருமூர்த்திமலை அணைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பஞ்சலிங்க அருவிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழையின் காரணமாக திருமூர்த்திமலை அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் புதன்கிழமை மாலை வரை பதிவான மழை அளவு விவரம் (மழை அளவு மி.மீட்டரில்):

திருப்பூர்- 24, அவிநாசி- 25, உடுமலை- 5.40, பல்லடம் -33, தாராபுரம்- 54, காங்கயம்- 70.80, மூலனூர்- 76, மொத்தம் 324.80 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. திருப்பூர் மாவட்டம் முழுவதும் அதிகபட்சமாக 46.40 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

## அமராவதி அணை நீர்மட்டம் உயர்வு

**உடுமலை,**

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் கன மழையின் காரணமாக அமராவதி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்துள்ளது. இதனால் கரையோர கிராமங்களின் குடிநீர்த் தேவைகளை ஓரளவு சமாளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மொத்த உயரம் 90 அடி. திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் இந்த அணையை நம்பியே உள்ளன.

மேலும், நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை உள்ளது.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஓராண்டாக மழை பொய்த்துப் போனதால் அணையில் போதுமான தண்ணீர் இல்லாத சூழ்நிலை நிலவி வந்தது. இந்த ஆண்டு கோடைக் காலத்தில் அணையின் நீர்மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றது. அணையின் நீர்மட்டம் 17 அடியாக சரிந்தது. இதில், ஸ்டோரேஜை கழித்தால் நீர்மட்டம் வெறும் 2 அடியாக குறைந்து போனது.இந்நிலையில், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான மறையூர், கோவில்கடவு, காந்த லூர் ஆகிய பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் அணைக்கு கடந்த சில நாள்களாக நீர்வரத்து அதிகரித்து வந்தது. புதன்கிழமை மாலை முதல் அணைக்கு 500 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது. இதனால் கரையோர கிராமங்களில் குடிநீர் பிரச்னை ஓரளவுக்கு தீர்ந்து விடும் என பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறையினர் வியாழக்கிழமை மாலை கூறியது:

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு உள்வரத்து அதிகரித்து வருகிறது. ஒரே நாளில் இரண்டு அடி உயர்ந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் கோடைக் கால குடிநீர் பிரச்னைகளை தீர்க்க முடியும் என்றனர்.

அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் வியாழக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி, 21 அடி நீர்மட்டம் இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 371 கன அடி வந்து கொண்டிருந்தது. 4,032 மில்லியன் கன அடி கொண்ட அணையில் 201.80 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணையில் இருந்து 7 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

## அடைமழையால் சந்தைக்கு மாடுகள் வரத்து குறைவு: வியாபாரிகள் ஏமாற்றம்

**ஈரோடு,**

அடைமழை காரணமாக ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் மாடுகள், எருமைகள் விற்பனைக்கு குறைவாக கொண்டுவரப்பட்டிருந்தன. வாரந்தோறும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில்

கூடும் இச்சந்தையில் மாடுகள், எருமைகளை விற்பனை செய்ய சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், கரூர், திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் வந்துசெல்கின்றனர்.

மாடுகள், எருமைகளை கொள்முதல் செய்ய கோவா, மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருவது வழக்கம். வறட்சி, கோடைகாலம் காரணமாக இச்சந்தைக்கு விற்பனைக்கு கொண்டுவரப்படும் மாடுகள், எருமைகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்தது.

இந்நிலையில், இந்த வாரம் மாடுகள், எருமைகள் வரத்து குறைந்துவிட்டது. செவ்வாய்க்கிழமை மாலை முதல் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் அடைமழை பெய்து வருவதால் இச்சந்தைக்கு மாடுகள், எருமைகளை விற்பனைக்கு கொண்டுவர விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், மகாராஷ்டிரம், ஆந்திரம், கேரளம், கோவா உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து அதிக எண்ணிக்கையில் வியாபாரிகள் வந்திருந்தனர். ஆனால், மாடுகள் அதிகளவில் இல்லாததால் அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இதுகுறித்து, மாட்டுச் சந்தை மேலாளர் முருகன் கூறியது: கடந்த வாரம் 450 மாடுகள், 300 எருமைகள் விற்பனைக்கு வந்திருந்தன. மழை காரணமாக இந்த வாரம் 350 மாடுகள், 250 எருமைகள் மட்டுமே வந்திருந்தன.

மாடு ரூ. 14,000 முதல் ரூ. 32,000 வரையும், எருமை ரூ. 16,000 முதல் ரூ. 33,000 வரையும் விற்பனை செய்யப்பட்டது.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 40.68 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 40.68 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 148 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 800 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.5 டி.எம்.சி.

## <u>நீலகிரி: 24 மணி நேரத்தில் 643 மி.மீ. மழை பதிவு</u>

**உதகை,**

நீலகிரி மாவட்டத்தில் 24 மணி நேரத்தில் 643 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. தொடர்மழையின் காரணமாக உதகை உள்ளிட்ட பகுதிகளில் தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். வார இறுதி நாள்களில் வருவதற்காக முன்பதிவு செய்திருந்தவர்களும் தங்களது முன்பதிவை ரத்து செய்துவிட்டனர்.

மாவட்டத்தில் புதன்கிழமை இரவிலிருந்து விடிய, விடிய பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக உதகை - கூடலூர் சாலையிலும், உதகை - மேட்டுப்பாளையம் சாலையிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உதகை - மேட்டுப்பாளையம் சாலையில் பர்லியாறு, பாரத் நகர் உள்ளிட்ட பகுதிகளில் சாலையின் குறுக்கே மரம் விழுந்ததாலும், மண் சரிவு ஏற்பட்டதாலும் வியாழக்கிழமை பிற்பகலில் இருந்து இச்சாலை வழியாக வாகனங்கள் அனுமதிக்கப்படவில்லை. உதகையிலிருந்து அனைத்து வாகனங்களும் கோத்தகிரி வழியாகவே மேட்டுப்பாளையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

உதகையில் எட்டின்ஸ் சாலை, நொண்டிமேடு பகுதிகளில் சாலையின் குறுக்கே விழுந்த மரங்களால் மின் கம்பிகள் அறுந்துவிழுந்தன. இதனால் நகரில் பல மணி நேரம் மின் தடை ஏற்பட்டது.

மைனலா பகுதியில் சாலையின் குறுக்கே விழுந்த மரத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உதகை - இத்தலாறு சாலையில், போர்த்தியாடா பகுதியில் சாலையின் குறுக்கே விழுந்த மரத்தாலும், சிறு மண் சரிவாலும் போக்குவரத்து தடைபட்டுள்ளது. மேலும், உதகை - கூடலூர் சாலையில், பைக்காரா பகுதியில் ஏராளமான மரங்கள் வேருடன் பெயர்ந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இம்மரங்கள் அருகிலுள்ள மின் கம்பிகளின் மீது உரசுவதால் அவ்வப்போது மின் விநியோகம் பாதிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 643 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில், அதிகபட்சமாக குன்னூர் பகுதியில் 84 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்) வருமாறு: கோத்தகிரி - 75,

கேத்தி - 63, குந்தா - 61, கொடநாடு - 53.4, கெத்தை - 51, அவலாஞ்சி - 50, பர்லியாறு - 41, உதகை - 40, அப்பர்பவானி - 38, எமரால்டு - 35, கிண்ணக்கொரை - 25, கிளன்மார்கன் - 13, கூடலூர் - 5.4, நடுவட்டம் - 5, தேவாலா - 3.

மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், விவசாய பாதிப்புகள் மற்றும் வீடுகள் சேதம் குறித்த விவரங்களை வருவாய்த் துறையினர் சேகரித்து வருகின்றனர். மழை ஓய்ந்த பின்னரே முழு விவரங்கள் தெரியவரும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வேலூர் மாவட்டத்தில் 3-வது நாளாக மழை

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் 3-வது நாளாக வியாழக்கிழமை பரவலாக மழை பெய்தது. வியாழக்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை விவரம் (மி.மீட்டரில்): ஆம்பூர் 18, அரக்கோணம் 15.8, குடியாத்தம் 2.3, சோளிங்கர் 4, திருப்பத்தூர் 2.2, வாணியம்பாடி 2, வேலூர் 41.2, வாலாஜா 5, ஆலங்காயம் 17, மேல்ஆலத்தூர் 2.8, ஆற்காடு 5, காவேரிபாக்கம் 11.6.

ஆம்பூரில்...

ஆம்பூரில் புதன்கிழமை நள்ளிரவும், வியாழக்கிழமை காலையிலும் கன மழை பெய்தது. அக்னி நட்சத்திரம் தொடங்கியும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்கியதுமே மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். வியாழக்கிழமை பகல் முழுவதும் பெரும்பாலான நேரம் மேக மூட்டத்துடனே காணப்பட்டது.

## திருவண்ணாமலையில் 23 மி.மீ. மழை

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக திருவண்ணாமலையில் 23.20 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது. மாவட்டம் முழுவதும் சில நாள்களாக மழை பெய்து வருகிறது. புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை அதிகாலை

வரையில் அதிகபட்சமாக திருவண்ணாமலையில் 23.20 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

மேலும், ஆரணியில் 16.60, செய்யாறில் 7.50, செங்கத்தில் 10, சாத்தனூர் அணையில் 10.80, வந்தவாசியில் 6, போளூரில் 21.20 மில்லி மீட்டர் அளவு மழை பதிவாகி உள்ளது.

மாவட்டம் முழுவதும் மொத்தம் 95.30 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது. திருவண்ணாமலையில் வியாழக்கிழமை காலை சிறிது நேரம் திடீரென பலத்த மழை பெய்தது.

## நாமக்கல்லில் ஏலத்துக்கு பருத்தி வரத்து சரிவு

**நாமக்கல்,**

தொடர் மழை காரணமாக நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு பருத்தி வரத்து மிகவும் குறைந்திருந்தது.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமன்றி அருகே உள்ள சேலம், கரூர், திருச்சி மாவட்டங்களில் இருந்தும் பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்படுகின்றன.

ஆனால், இந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு 200 மூட்டை ஆர்சிஹெச் ரகப் பருத்திகள் மட்டுமே வரப் பெற்றன. அவை குவிண்டால் ரூ.4800 முதல் ரூ.5380 வரை ஏலம் போயின. இதன்படி, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.5 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டன.

வாரந்தோறும் இங்கு நடைபெறும் ஏலத்துக்கு குறைந்தபட்சம் ஆயிரம் மூட்டைகளாவது வரக்கூடும்.

ஆனால், கடந்த வாரம் தேர்தல் காரணமாக விடுமுறை அளிக்கப்பட்டிருந்தும் இந்த வாரம் 200 மூட்டை பருத்திகளே வரப்பெற்றதற்கு தொடர் மழையே காரணம் என்று கூட்டுறவு வேளாண் விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

**<u>மானாவாரியில் அதிக மகசூல் பெற கோடை உழவு செய்ய அறிவுறுத்தல்</u>**

**கிருஷ்ணகிரி,**

மானாவாரியாக சாகுபடி செய்யும் விவசாயிகள் கோடை உழவு மூலம் அதிக மகசூல் பெறலாம் என, எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து அந்த மையத்தினர் வெயிட்ட செய்திப் குறிப்பு:

தமிழகத்தில், ஆண்டு தோறும் 7 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 3.1 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவு மானாவாரியாக பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கேழ்வரகு, சாமை, நிலக்கடலை, பருத்தி போன்ற பயிர்கள் மானாவாரி அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்த மானாவாரி பயிர்களில் அதிக மகசூல் பெற கோடை உழவு அவசியம்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் கோடை காலத்தில் சராசரியாக 140 மிமீ. வரை மழை பெய்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சராசரியாக 130 மிமீ. வரை மழை பெய்கிறது.

கோடை உழவு தொடங்க சித்திரை, வைகாசி மாதமே சிறந்த காலம். கோடை உழவு ஆழமாக செய்ய வேண்டும்.

மானாவாரி பயிர்களுக்கு சுமார் 300 முதல் 500 மிமீ. வரை மழை தேவைப்படுகிறது. கோடை கால பருவ மழை சில காலம் முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ பெய்கிறது. மழை பெய்யும் போது, மழைநீர் நிலத்துக்குள் செல்லாமல், மேல்பரப்பில் வழிந்தோடி, மண்ணில் உள்ள சத்துக்களை அடித்துச் செல்லுகிறது.

இதனால், மண் வளம் குறைந்து பயிர்களில் பூச்சித் தாக்குதல், களைச் செடிகள் அதிகரிக்கும். எனவே, மானாவாரி பயிர் சாகுபடி செய்ய கலப்பையால் ஆழமாக உழவு செய்ய வேண்டும்.

ஆழ உழுவதன் மூலம் மண்ணில் இறுக்கம் நீக்கப்பட்டு காற்றோட்டம் உண்டாக்கப்படுகிறது. மேலும், மழை பெய்யும் போது மழை நீர் அதிக அளவில் உறிஞ்சப்படுவதால் நிலத்தில் மழை நீர் சேமிக்கப்படுகிறது.

கோடை உழவால் நிலத்தில் உள்ள மண் கட்டிகள் உடைக்கப்பட்டு, நிலம் நன்கு பண்படுத்தப்படுகிறது. மேலும், மண்ணில் உள்ள கூட்டுப் புழுக்கள் அழிக்கப்படுகின்றன. களைச் செடிகள் அப்புறப்படுத்தப்பட்டு அதில் உள்ள பூச்சிகள், நோய்க் காரணிகள் அழிக்கப்படுகின்றன. மழைநீர் ஆவியாகாமல் தடுக்கப்படுகிறது.

ஆடி மாதத்தில் உழவு

செய்த நிலத்தில் விதைப்பு செய்யும் போது, விதைப்பு எளிதாக இருக்கும். காலதாமதம் தவிர்க்கப்படுகிறது.

இந்தக் காலத்தில் விவசாயிகள் குறைந்த தண்ணீர் தேவைப்படுகிற சிறுதானியப் பயிர்களான கேழ்வரகு, சாமை, பயறு வகை பயிர்களில் துவரை, உளுந்து, பாசிப் பயிறு எண்ணை வித்துப் பயிரான நிலக்கடலை போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம்.

கோடை காலத்திலும், தென்மேற்கு பருவ மழை காலத்திலும் பெய்யும் மழை நீரை நிலத்தில் சேமிக்க கோடை உழவு அவசியமாகிறது. இதன் மூலம் வறட்சியிலும் பயிரைப் பாதுகாக்க முடியும் என கிருஷ்ணகிரி மாவட்டம், எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தினர் தெரிவித்தனர். மேலும், விவரங்களுக்கு 04343 - 296039 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவட்டத்தில் 3வது நாளாக பரவலாக மழை

**கரூர்/குளித்தலை,**

கரூர் மாவட்டத்தில் புதன்கிழமை மாலை முதல் வியாழக்கிழமை வரை பரவலாக மழை பெய்தது. அணைப்பாளையத்தில் மட்டும் புதன்கிழமை 51.20 மி.மீ., மழை பதிவானது.

கரூர் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துவிட்டது. இதனால் மாவட்டத்தில் விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் குடிநீர் கிடைக்காததால் பொதுமக்கள்

சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில் கத்தரி வெயில் என்னும் அக்னி நட்சத்திரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. கத்தரி வெயில் தொடங்கும் முன்பே, அதாவது மார்ச் மாதம் முதலே கோடை வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியது. சாலைகள் அனைத்திலும் கானல் நீரே தென்பட்டது. இந்நிலையில் கத்தரி வெயில் தொடங்கியதும், வெப்பத்தின் தாக்கம் அதிகம் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் முதல் அவ்வப்போது மேக கூட்டங்கள் கூடி வெயிலின் உஷ்ணத்தை குறைத்தன. இந்நிலையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெப்பச் சலனம் காரணமாக தென்மேற்கு வங்கக்கடலில் கடந்த சில நாட்களுக்கு முன் காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் ஆங்காங்கே கோடை மழை பெய்து வருகிறது.

கரூர் மாவட்டத்திலும் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் விடிய, விடிய மழை பெய்து ஆங்காங்கே வறண்டு கிடந்த நிலங்கள் மற்றும் தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கத் தொடங்கியுள்ளது. மாவட்டத்தில் விடிய, விடிய பெய்த மழையில் அரவக்குறிச்சியில் மட்டும் 79.60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் புதன்கிழமை இரவு 8 மணி முதல் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்): அரவக்குறிச்சி- 29.20, க. பரமத்தி- 39.20, குளித்தலை- 19, மாயனூர்- 30, கரூர்- 26, அணைப்பாளையம்-51.20, தோகைமலை 25, பஞ்சப்பட்டி- 33.20, பாலவிடுதி- 45.10, கடவூர்- 37.40, கிருஷ்ணராயபுரம்- 31, மைலம்பட்டி 45 என மொத்தம் 411 மி.மீ மழை பெய்துள்ளது.

குளித்தலை, தோகைமலை பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி...

கரூர் மாவட்டம் குளித்தலை மற்றும் தோகைமலை பகுதிகளில் கடந்த 3 நாள்களாக பெய்துவரும் பரவலான மழை விவசாயிகளுக்கு பெரிதும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குளித்தலை மற்றும் தோகைமலை பகுதியில்

கடந்த 3 நாள்களாக தொடர்ந்து லேசான மற்றும் மிதமான மழை பெய்து வந்தது. இதனால் சாலைகளில் பொதுமக்களின் நடமாட்டம் குறைந்தே காணப்பட்டது. இந்த மழை விவசாயிகளை பெரிதும் மகிழ்ச்சி அடையவைத்துள்ளது. இப்பகுதியில் தற்போது கரும்பு, வாழை, வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பயிர்களுக்கு தண்ணீர் அதிகமாக தேவைப்படும். எனவே இந்த மழை விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய தேவையான தண்ணீர் தேவையை குறைத்துள்ளது. மேலும் எவ்வித சேதம் ஏற்படுத்தாமல் பெய்துள்ள இம்மழை விவசாயிகளுக்கு பெரிதும் பயன்தரக்கூடிய மழை என இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## பெரம்பலூர்மாவட்டத்தில் 55.60 மி.மீ., மழை

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் சராசரியாக 55.60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 4 நாள்களாக பரவலான மழை பெய்து வருகிறது. அதன்படி, புதன்கிழமை இரவு 8 மணி முதல் வியாழக்கிழமை காலை 8 மணி வரை செட்டிக்குளம்- 47 மில்லி மீட்டர், பெரம்பலூர்- 75 மில்லி மீட்டர், வேப்பந்தட்டை- 76 மில்லி மீட்டர், தழுதாழை- 51 மில்லி மீட்டர், பாடாலூர்- 29 மில்லி மீட்டர் என மொத்தம் 278 மில்லி மீட்டரும், மாவட்டத்தில் சராசரியாக 55.60 மில்லி மீட்டரும் என 5 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

தொடர்ந்து, வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் பலத்த காற்றுடன் பெய்த மழையில், பெரம்பலூர் அருகே உள்ள செட்டிக்குளம்- செஞ்சேரி சாலையிலும், பெரம்பலூர் புறநகர் பகுதியான துறைமங்கலத்திலும் சாலை ஓரங்களில் இருந்த மரங்கள் விழுந்தன.

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கோடை மழையால், வறண்டு கிடந்த குளம், கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

## திருவாரூர், நாகை, காரைக்காலில் தொடர் மழை

**திருவாரூர், நாகை / காரைக்கால்,**

திருவாரூரில் புதன்கிழமை மாலையிலிருந்து இடைவிடாமல் இரவு முழுவதும் தொடர்ந்து பெய்த மழையால் அதிகபட்சமாக குடவாசலில் 102.4 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இந்நிலையில், மே 5-ம் தேதி நிலவரப்படி மாவட்டம் முழுவதும் பெய்த 80.80 மி.மீட்டரில் சராசரி 8.98 மி.மீ மழையும், 6-ம் தேதி பெய்த

139 மி.மீட்டரில் சராசரி 19.52 மி.மீ மழையும், 7-ம் தேதி பெய்த 180.30 மி.மீட்டர் மழையில் சராசரி 20.03 மி.மீ. ம ழை பதிவாகியுள்ளது.

கடந்த 3 நாள்களாக பெய்த மழையின் அளவைவிட, 4-வது நாளான புதன்கிழமை மாலை 5.45 மணியளவில் தொடங்கிய மழை இரவு முழுவதும் தொடர்ந்து, வியாழக்கிழமையும் சிறிது நேர இடைவெளிவிட்டு பெய்தது.

குடவாசலில் 102.4 மி.மீ. மழை: திருவாரூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில்:

முத்துப்பேட்டை - 75.2, திருவாரூர் - 72.6, நீடாமங்கலம் - 59.2, பாண்டவையாறு தலைப்பு - 58.6, மன்னார்குடி - 56, திருத்துறைப்பூண்டி - 55.4, வலங்கைமான் - 50.3, நன்னிலம் - 48.2.

நாகை மாவட்டத்தில் நீடிக்கிறது மழை: நாகை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வியாழக்கிழமையும் மழை நீடித்தது.

வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, நாகை மாவட்டத்தில் கடந்த 4 நாள்களாக மழை பெய்து வருகிறது. புதன்கிழமை மாலை நேரத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பலத்த சூறாவளிக் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால், பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன.

வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக தலைஞாயிறில் 60.4 மி.மீ மழை பதிவானது. மற்ற பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்):

திருப்பூண்டி- 55.4, வேதாரண்யம்- 52.2, மணல்மேடு- 41, மயிலாடுதுறை- 35, நாகப்பட்டினம்- 33.6, சீர்காழி- 23, கொள்ளிடம்- 20.5, தரங்கம்பாடி- 17.

வியாழக்கிழமை காலை நேரத்தில் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் லேசான மழை பெய்தது. நாகை உள்ளிட்ட பகுதிகளில் வியாழக்கிழமை பகல் நேரத்திலும் அவ்வப்போது லேசான மழை நீடித்தது.

காரைக்காலில் வர்த்தகம், கட்டுமானப் பணிகள் பாதிப்பு: காரைக்கால், மே 8: கத்திரி வெயில் காலத்திலும் தொடர்ந்து பெய்யும் மழையால் காரைக்காலில்

வர்த்தகம், கட்டட கட்டுமானப் பணி, மீன்பிடிப்பு உள்ளிட்ட பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடலோர மாவட்டமான காரைக்காலில் கடந்த 4 நாள்களாக சிறிது சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு மழை பெய்து வருகிறது. இதனால் கத்திரி வெயிலின் தாக்க அறிகுறியே இல்லை.

இந்த மழையினால், வர்த்தகம் கடந்த வாரத்தை ஒப்பிடும்போது வெகுவாக குறைந்தே இருப்பதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. கோடைகாலத்தில்தான் கட்டடம் கட்டுவோர் கான்கிரீட் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வர். மழையினால் இப்பணிகளை செய்ய முடியாமல் கட்டுமானப் பணியினர் முடங்கியுள்ளனர்.

விசைப்படகுகள் மீன்பிடித் தடையில் உள்ளதால், பைபர் படகுகள் மட்டும் கடலுக்கு செல்கிறது. மழையினால் அதிகாலையில் கடலுக்கு குறித்த நேரத்தில் செல்ல முடியாமல் மீனவர்களும் தவிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

கோடை விடுமுறையில் சுற்றுலா வருவோர் காரைக்காலுக்கு அதிகரித்துள்ள நிலையில், மழையால் திருநள்ளாறு கோயில், காரைக்கால் அம்மையார் கோயிலுக்கு வருவோரின் எண்ணிக்கையும் கணிசமாக குறைந்துள்ளது.

## முல்லைப் பெரியாறு தீர்ப்பு: விவசாயிகள் கொண்டாட்டம்

**குலசேகரம்,**

முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று குமரி மாவட்டம் கொட்டூர் கிராமத்தில் விவசாயிகள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

மாவட்ட உழவர் பெருமன்றச் செயலர் பி. ஹென்றி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, அயக்கோடு ஊராட்சித் தலைவர் தங்கரமணி முன்னிலை வகித்தார். இதில், அன்னை தெரசா அன்னாசி உற்பத்தியாளர் மற்றும் உழவர் மன்றச் செயலர் லக்கி குளோரி, நிர்வாகிகள் பால்மணி, பொன்னையன், லூக்காஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் சராசரியாக 43.71 மி.மீ. மழை

**தூத்துக்குடி,**

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக பரவலான மழை பெய்த போதிலும் வியாழக்கிழமை சில இடங்களில் மட்டுமே பெய்தது. கத்திரி வெயிலின் தாக்கத்தில் இருந்து மீண்டதாக மக்கள் நினைத்து வந்த நிலையில் தூத்துக்குடி மாநகரப் பகுதியில் வியாழக்கிழமை மீண்டும் வெயில் அடிக்கத் தொடங்கியது. இருப்பினும், பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வெயில் இல்லாததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி முதல் வியாழக்கிழமை காலை 8 மணி வரை அதிகபட்சமாக காயல்பட்டினம் பகுதியில் 150 மி.மீ. மழை பதிவாகியது. தூத்துக்குடி பகுதியில் 83.40 மி. மீ. மழை பதிவாகியது. கோவில்பட்டி பகுதியில் 7 மி.மீ., ஓட்டப்பிடாரம் பகுதியில் 16 மி.மீ., சாத்தான்குளம் பகுதியில் 61.40 மி.மீ., ஸ்ரீவைகுண்டத்தில் 32.20 மி.மீ., திருச்செந்தூரில் 97 மி.மீ., விளாத்திக்குளத்தில் 40 மி. மீ., கயத்தாறில் 5 மி.மீ மழை பதிவாகியது. கீழஅரசடியில் 78 மி.மீ., எட்டயபுரத்தில் 1 மி.மீ., கடம்பூரில் 10 மி.மீ., வேடநத்தத்தில் 30 மி.மீ., சூரங்குடியில் 68 மி.மீ., வைப்பாறில் 50 மி.மீ., கழுகுமலையில் 15 மி.மீ., காடல்குடியில் 51 மி.மீ. மழை பதிவானது. மாவட்டம் முழுவதும் 830.50 மி.மீ. மழை பதிவானது. சராசரியாக 43.71 மி.மீ. மழை பதிவானது. திருச்செந்தூர் பகுதியில் புதன்கிழமை இரவு பெய்த மழையால் தோப்பூரைச் சேர்ந்த பால்ராஜ் (40) என்பவரது வீடு இடிந்து விழுந்தது. இதில், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அனைவரும் உயிர் தப்பினர். சம்பவ இடத்தை திருச்செந்தூர் வருவாய் ஆய்வாளர் சின்னத்துரை, கிராம நிர்வாக அலுவலர் செல்வலிங்கம் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

## தென்னை, மா மரங்களுக்கு உயிர் கொடுத்த மழை

**கடலூர்,**

தற்போது பெய்து கொண்டிருக்கும் தொடர்மழை, காய்ந்து கொண்டிருக்கும் தென்னை, மா போன்ற மரங்களுக்கு உயிர் கொடுத்துள்ளது என கடலூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். தமிழகம் முழுவதும் மார்ச் மாதம்

தொடக்கத்தில் இருந்தே வெயிலின் தாக்கம் அதிகம் இருந்து வருகிறது. கடந்த 3 நாள்களுக்கு முன்பு வரை தமிழகத்தின் பல்வேறு இடங்களில் 100 டிகிரிக்கு குறையாமல் வெயில் அளவு பதிவாகி இருந்தது.

வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்தம் தாழ்வு நிலை உருவானதால் கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த 4-ம் தேதி கத்திரி வெயில் துவங்கிய நிலையில், 5 வது நாளாக மழை பெய்து வருவதால் வெயிலின் உக்கிரம் குறைந்துள்ளது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோடை மழையை நம்பி விவசாயிகள் கோடை உழவை துவக்க திட்டமிட்டுள்ளனர். சித்திரை உழவு என விவசாயிகள் அழைக்கும் கோடை உழவு செய்வதால் மண் நெகிழும் தன்மை ஏற்பட்டு மழைநீர் நிலத்திற்குள் செல்லும். எனவே, தற்போது பெய்து வரும் கோடை மழை தொடர்ந்து நீடித்தால் விவசாயத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுமட்டுமல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக கருகி வந்த நீண்ட காலம் பலன்தரும் தென்னை, மா மரங்கள் கோடை மழையால் மீண்டும் துளிர்விடும் நிலையில் உள்ளன. இந்த மழை மூலம் கடலூர் மாவட்டத்தில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி பணிகள் தொடங்க வாய்ப்புள்ளது.

இதுபோல, மாவட்டத்தில் மிகவும் வறட்சிப் பகுதியான திட்டக்குடி, விருத்தாசலம், வேப்பூர் வட்டங்களில் உள்ள குடிநீர் தட்டுப்பாடு ஓரளவிற்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுமட்டுமல்லாமல் நகரப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் ஆழ்குழாய் கிணறுகளால் உறிஞ்சப்பட்டு அதல பாதாளத்திற்கு சென்றுள்ள நிலத்தடி நீர்மட்டம் மீண்டும் உயர வேண்டும் என்றால் கோடை மழை நீடிக்க வேண்டும் என பொதுமக்களும், விவசாயிகளும் எதிர்பார்க்கின்றனர்.

## உளுந்தூர்பேட்டையில் அதிகபட்சமாக 57 மி.மீ மழையளவு பதிவு

**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்டத்தில் அதிக பட்சமாக உளுந்தூர்பேட்டையில் 57 மி.மீ மழையளவு பதிவாகியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் முக்கிய பகுதிகளில் பதிவான மழையளவு விவரம்:

செஞ்சி-14 மி.மீ, திருக்கோவிலூர்-28.50 மி.மீ, திண்டிவனம்-28 மி.மீ, விழுப்புரம்-26 மி.மீ, உளுந்தூர்பேட்டை-57 மி.மீ, வானூர்-28 மி.மீ, சங்கராபுரம்-16 மி.மீ, கள்ளக்குறிச்சி-11 மி.மீ, மரக்காணம்-47 மி.மீ மழையளவு பதிவாகியுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தமாக 255.50 மி.மீ மழையளவு பதிவாகியுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் சராசரி மழையளவு விவரம் 28.39 மி.மீ ஆகும்.

## ரூ.7.9 கோடியில் புதிய அணைக்கட்டு: தலைமைப் பொறியாளர் ஆய்வு

**விழுப்புரம்,**

திண்டிவனம் அருகே ரெட்டனை பகுதியில் கட்டப்பட்டு வரும் புதிய அணையை பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ரா.ஏமராஜ் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

திண்டிவனம் அருகே உள்ள ரெட்டணை கிராமத்தில் தொண்டி ஆற்றின் குறுக்கே ரூ.7.9 கோடியில் புதிய அணை கட்டப்படுகிறது. இந்த அணையை பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் தலைமை பொறியாளர் ரா.ஏமராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது திருவண்ணாமலை வடிநில வட்டம், கண்காணிப்பு பொறியாளர் நாகராஜன், கீழ்பெண்ணையாறு வடிநில கோட்டம் செயற்பொறியாளர் ஜெயராம், திண்டிவனம் கீழ்பெண்ணையாறு வடிநில உபகோட்டம் உதவி செயற்பொறியாளர் மு.அந்தோணிதுரை, உதவி பொறியாளர்கள் மோகன்ராமன், ஐயப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

இங்கு கட்டப்படும் இந்த ரெட்டணை அணைகட்டு மூலம் அவ்வையார்குப்பம், சின்னநெற்குணம், விளங்கம்பாடி ஆகிய கிராம ஏரிகளுக்கு தண்ணீர் கிடைக்கும். இப் பகுதியில் மொத்தம் 580.64 ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**பெரியாறில் 142 அடியாக உயர்த்த ஆயத்தம்: அரசாணை வெளியிடும் பணிகள் துரிதம்**




**கம்பம்** : முல்லைப் பெரியாறு அணை நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கான அரசாணையை வெளியிட, தமிழக அரசு தீவிரம் காட்டி வருகிறது. அணையில் மதகுகளை (ஷட்டர்) இறக்க பொதுப்பணித்துறையினர் ஆயத்தமாகி வருகின்றனர்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்துவது தொடர்பாக, கடந்த 1979 முதல் கேரளா முரண்டு பிடித்து வருகிறது. பல சட்டரீதியான போராட்டங்களை தமிழகம் நடத்தி, இறுதியில் வெற்றி கண்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு, நேற்று முன்தினம் அளித்த தீர்ப்பில், 'பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம்' என, உத்தரவிட்டது.இந்நிலையில் தீர்ப்பின் நகல், தமிழக அரசுக்கு இன்று கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக தீர்ப்பை மேற்கோள்காட்டி, அரசாணை வெளியிட, தமிழக அரசின் உயர் அதிகாரிகள் குழு தீவிர ஆலோசனையில் இறங்கியுள்ளது.

**இதுகுறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில்**, 'உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அரசாணையை தமிழகம் வெளியிட வேண்டும். அரசாணை மற்றும் தீர்ப்பு நகலை, பொதுப்பணித்துறை தலைமை

பொறியாளருக்கு அரசு அனுப்பும். அவற்றை பெற்றவுடன், தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு, நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த, அணையின் மதகுகளை இறக்குவர். அதற்கான பணிகள் முழுவீச்சில் நடக்கின்றன' என்றனர்.

## இரு தினங்களுக்கு கனமழை நீடிக்கும்

**சென்னை**: ""தமிழகத்தின் உள் மாவட்டங்களில், அனேக இடங்களிலும், வட மாவட்டங்களில் ஒருசில பகுதிகளிலும், கனமழைக்கு வாய்ப்புள்ளது," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் தெரிவித்தார். வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்து, நேற்று முன்தினம் காலை, தென் கேரளாவில், தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலை கொண்டிருந்தது. இதன் காரணமாக, தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில், கனமழை பெய்துள்ளது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் கூறியதாவது: தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்து, காற்றழுத்த தாழ்வு பகுதியாக, வட கேரளாவை அடுத்த, அரபிக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இது மீண்டும் வலுவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அனேக இடங்களில் கனமழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, ராமநாதபுரத்தில், 13 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழகத்தின் உள் மாவட்டங்களில், அனேக இடங்களிலும், வட மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், கனமழைக்கு வாய்ப்புள்ளது. கடல் கொந்தளிப்புடன் இருப்பதால், லட்சத்தீவு, கேரளா, கர்நாடக மீனவர்கள், கடலுக்குள் செல்ல வேண்டாம் என, அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு, அவர் கூறினார். கடந்த சில தினங்களாக, தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, தென் மாவட்டங்களில் உள்ள அணைகள் நிரம்பி வருகின்றன. இத்துடன், அணைகளுக்கு நீர் வரத்தும் அதிகரித்துள்ளது. மழைக்கு, மதுரை மற்றும் கன்னியாகுமரியில், மூவர் உயிரிழந்துள்ளனர்.

**குறுவை சாகுபடியை பிரகாசமாக்கிய கோடை மழை : 8 லட்சம் ஏக்கரில் சாகுபடி நடக்க வாய்ப்பு**




தமிழகத்தில் தற்போது பெய்து வரும் கோடைமழையால், குறுவை சாகுபடி வாய்ப்பு பிரகாசமாகி வருகிறது. இதனால், டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், நெல் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும், குறுவை, சம்பா ஆகிய, இரண்டு பருவ நெல் சாகுபடி செய்வதில், விவசாயிகள் பெரிதும் ஆர்வம் காட்டுவர்.

கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை பெய்து, அதன் மூலம் திறக்கப்படும் காவிரி நீர் மேட்டூரை வந்தடையும். குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து, ஆண்டு தோறும், ஜூன், 12ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். 8 லட்சம் ஏக்கரில், குறுவை சாகுபடி நடக்கும்.

இன்ப அதிர்ச்சி : ஆனால், கடந்த, இரண்டு ஆண்டுகளாக, மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லை; டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி நடக்கவில்லை. நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி, கடந்த ஆண்டு, 1 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்தது. தொடர்ந்து, வடகிழக்கு பருவமழை போதுமான அளவில் பெய்யாததால், டெல்டா மாவட்டங்களில் உள்ள நீராதாரங்களில் தண்ணீர் நிரம்பவில்லை. கடும் வறட்சியால் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. எனவே, இந்த ஆண்டு, குறுவை சாகுபடி நடக்க வாய்ப்பில்லை என்ற சூழல் காணப்பட்டது. எனவே, தற்போது கோடை உழவு செய்துவிட்டு, வடகிழக்கு பருவமழை பெய்தால், சம்பா சாகுபடி செய்யலாம் என, விவசாயிகள் முடிவு செய்து இருந்தனர். ஆனால், அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் வகையில், டெல்டா மாவட்டங்களில், தற்போது கோடை மழை பெய்து வருகிறது.

இது, குறுவை சாகுபடி வாய்ப்பை பிரகாசமாக்கி வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

அரிசி விலை குறையும் : டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகி ஒருவர் கூறியதாவது; சம்பா சாகுபடிக்கு பின், பலர், நிலங்களை அப்படியே விட்டு விட்டனர். அவற்றில், புல், பூண்டு உள்ளிட்ட செடிகள் வளர்ந்து கோடை வெயிலில் கருகி விட்டன. நிலத்தடி நீராதாரங்களை கொண்டு, சிலர் கோடை உழவு செய்து வருகின்றனர். கத்தரி வெயில் துவங்கிய நேரத்தில், கோடை மழை பெய்து வருவது, குறுவை சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. காய்ந்து கிடந்த நிலங்களை பண்படுத்த இது உதவும்.

இதுமட்டுமின்றி, ஜூன் மாதம் துவங்கவுள்ள குறுவை சாகுபடிக்கு, நாற்று விடுதலுக்கும் தண்ணீர் கிடைக்கும். ஜூன் மாதம், மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டால், டெல்டா மாவட்டங்களில், வழக்கமான அளவான, எட்டு லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடக்கும். இதன்மூலம், அரிசி கொள்முதல் செய்ய, வெளி மாநிலங்களை தேடி, அரசு செல்ல வேண்டிய நிலை ஏற்படாது. தமிழகத்திலும், அரிசி விலை குறையும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்வு

**மதுரை**: தொடர் மழையால், பெரியாறு அணை நீர்மட்டம், ஒரே நாளில், 3 அடி உயர்ந்துள்ளது. தென்மாவட்டங்களில் தற்போது, நல்ல மழை பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில், பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியிலும் மழை பெய்வதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில மாதங்களாக, வினாடிக்கு, 100 கன அடி தண்ணீரே வந்தது. தொடர் மழையால் நேற்று, வினாடிக்கு 6,500 கன அடி தண்ணீர் வருகிறது. பெரியாறு அணையில் நேற்று முன்தினம், 111 அடி தண்ணீர் இருந்தது. ஒரே நாள் மழையால், 3 அடி உயர்ந்து, நேற்று நீர்மட்டம் 114 அடியானது. கடந்த ஆண்டு இதே நாளில், 112 தண்ணீர் இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 500 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் நீர் இருப்பு, 1,627 மில்லியன் கன அடியாக உள்ளது. இதேபோல், வைகை அணையில் நேற்று முன்தினம், 21 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று ஒரே நாளில், 1 அடி உயர்ந்துள்ளது.

## மேட்டூர் அணை நீர் திறப்பு நிறுத்தம்

**மேட்டூர்**: வினாடிக்கு, 500 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை டெல்டா குடிநீருக்கான நீர் திறப்பு, நேற்று காலை நிறுத்தப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா குடிநீருக்காக, வினாடிக்கு, 3,000 கன அடி நீர் திறக்கப்பட்டது. வங்க கடலில் உருவான தாழ்வழுத்த காற்று மண்டலம் காரணமாக, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதனால், மூன்று நாட்களுக்கு முன், டெல்டா குடிநீர் திறப்பு வினாடிக்கு, 1,000 கன அடியாக குறைக்கப்பட்டது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் மழை தீவிரம் அடைந்ததால் வினாடிக்கு, 500 கன அடியாக இருந்த மேட்டூர் அணை குடிநீர் திறப்பு, நேற்று நிறுத்தப்பட்டது. நேற்று அணை நீர் மட்டம், 33 அடியாகவும், நீர் இருப்பு, 9 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 2,000 கன அடி நீர் வந்தது.

## நீர்மட்டத்தை உயர்த்த விரைவான நடவடிக்கை : பெரியாறு பாசன விவசாயிகள் வலியுறுத்தல்

**மதுரை**: ""சுப்ரீம் கோர்ட் உத்தரவை தொடர்ந்து, 142 அடி நீர்தேக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்" என பெரியாறு வைகை பாசன திட்டக்குழுவினர், முதல்வர் ஜெயலலிதாவிடம் வலியுறுத்தியுள்ளனர். முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்கலாம் என, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது. இதையடுத்து பெரியாறு வைகை பாசன திட்டக்குழு உறுப்பினர்கள், ஜி.முருகன், பரந்தாமன், அருள்பிரகாசம், எம்.முருகன், என்.ஏ.காரணம் உள்பட பலர், மதுரை கலெக்டர்

சுப்ரமணியனை நேற்று சந்தித்தனர். முதல்வர் ஜெயலலிதாவுக்கு அனுப்பிய மனுவின் நகலை அவரிடம் வழங்கினர். மனுவில் கூறியிருப்பதாவது: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கோர்ட் தீர்ப்பை அமல்படுத்துவதில் கேரளா, குழப்பத்தை விளைவிக்கும் என விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர். எனவே, தாங்களும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில், அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த தேவையான நடவடிக்கைகளை, விரைந்து எடுத்து அணையின் மதகுகளை இறக்க, அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும், என தெரிவித்துள்ளனர். உறுப்பினர் அருள்பிரகாசம் கூறுகையில், ""கடந்த முறை இதேபோன்ற தீர்ப்பு வந்ததும், கேரள அரசு அவசர,

அவசரமாக அணையின் பாதுகாப்பு குறித்த சட்டத்தை கொண்டு வந்தது. அதுபோன்ற நடவடிக்கைக்கு இடம்தராமல், தாமதிக்காமல் அணையின் ஷட்டர்களை உடனே இறக்கி, நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும்," என்றார்.

## கடல் விரால் மீன் அறுவடை கிலோ ரூ.250க்கு விற்பனை

**மண்டபம்**: மீனவர்களுக்கு மாற்றுத்தொழிலாக, கடல் மீன் வளர்ப்பை மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தினர் மேற்கொண்டனர். கடல்விரால்(கோபியா) மீன் குஞ்சுகளை, மீனவர்களுக்கு வழங்கினர். சில மீனவர்கள் மரைக்காயர்பட்டிணம், ஓலைக்குடா போன்ற பகுதியில் கடலில் கூண்டுகள் வைத்து மீன்களை வளர்த்தனர். நேற்று மீன் அறுவடை நிகழ்ச்சி, கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடந்தது.

மத்திய கடல் மீன் ஆராய்ச்சி கழக விஞ்ஞானி(பொறுப்பு) கோபக்குமார் பேசியதாவது:

"கோபியா அக்வா கல்ச்சர்' மீனவர் சங்கம், தமிழக அரசிடம் பதிவு செய்துள்ளனர். ரூ.21 லட்சம் முதலீட்டில், 10 கூண்டுகள் அமைத்தனர். 37 கிராம் எடையுள்ள 6,400 கடல் விரால் மீன் குஞ்சுகளை 2013 நவம்பரில் அறிமுகப்படுத்தினோம். அவை தற்போது ஒன்றரை முதல் இரண்டரை கிலோ வரை வளர்ந்துள்ளன. உள்ளூர் மார்க்கெட்டில் நல்ல கிராக்கி உள்ளது. இந்த மீன் வளர்ப்பிற்கு, அரசின் மானியமும் உண்டு, என்றார். இந்த மீன் ஒரு கிலோ ரூ.250 விற்பனையானது. மூன்று கிலோ வரையுள்ள இந்த மீன்கள் உள்ளூர் மார்க்கெட்டிலும், அதற்கு மேல் எடை இருந்தால் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும்.

## கேரளாவில் கனமழை ஏன் : விஞ்ஞானி அதிர்ச்சி தகவல்

**திருவனந்தபுரம்**: ""கேரளாவில், தொடர்ந்து பெய்து வரும் கன மழைக்கு, புவி வெப்பநிலை அதிகரிப்பே காரணம்," என, பிரபல விஞ்ஞானி சேகர் லுகோசே தெரிவித்து உள்ளார். கேரள பேரிடர் மேலாண்மை ஆணைய உறுப்பினர், பேராசிரியரும், விஞ்ஞானியுமான சேகர் லுகோசே கூறியதாவது:

புவி வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக பருவநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடல் நீரில் ஏற்பட்டுள்ள அழுத்தத்தின் காரணமாக, கேரளா

முழுவதும் கனமழை பெய்து வருகிறது. இந்த பருவநிலை மாற்றம், நாட்டின் சராசரி மழைப் பொழிவில் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு அவர் கூறினார். கேரளாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழைக்கு, 18 பேர் பலியாகியுள்ளனர். 250 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர்கள் சேதமடைந்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. "இந்த ஆண்டு, வழக்கத்திற்கு மாறாக குறைவான அளவு மழைப் பொழிவே காணப்படும்' என, சேகர் கடந்த ஆண்டே கூறியிருந்தார். இந்நிலையில் வானிலை ஆராய்ச்சி மையம் இந்த தகவலை உறுதி செய்துள்ளது.

## கரூரில் கொட்டி தீர்க்கும் மழை

**கரூர்**: கரூர் மாவட்டத்தில் விவசாயிகள் தங்களின் நிலங்களில் கரும்பு, வாழை, வெற்றிலை உள்ளிட்ட போன்ற பயிர் செய்துள்ளனர். இந்நிலையில் பருவமழை சரிவர பெய்யாததாலும், காவிரி ஆற்றில் தண்ணீர் சரியானபடி வராததாலும் கடுமையான வறட்சி காரணமாக நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்தது. இதனால் பயி ர்கள் நீரின்றி காய்ந்து கருகும் நிலை ஏற்பட்டது. அக்னி நட்சத்திரம் துவங்கி தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் கடந்த மூன்று நாட்களாக மழை பெய்து வருகிறது. கரூர் மாவட்டத்தில் கடந்த, 5ம் தேதி இரவு முதல் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. காய்ந்து கருகும் நிலையில் இருந்த பயிர்கள் துளிர் விடும் நிலை ஏற் பட்டுள்ளது. கடும் வெயில் காரணமாக தார் சாலையில் இருகர வாகனங்களிலும் மற்றும் நடந்தும் செல்ல முடியாத அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இந்நிலையில் தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக பூமி குளிர்ச்சி அடைந்துள்ளதால் சில நாட்களுக்கு வெயிலின் தாக்கம் இருக்காது. மேலும் தொடர் மழையின் காரணமாக காய்ந்த நிலையில் இருந்த பயிர்களை வருணபகவான் (மழை) காப்பாற்றி விட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் விடிய விடிய பெய்த மழை தொடர்ந்து காலை முதல் பெய்து வருவதால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின்இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை, 6 மணி வரை மாவட்டத்தில் மழையளவு விபரம் (மி.மீ.,): அரவக்குறிச்சி, 29.20, க.பரமத்தி 39.20, குளித்தலை 19, கரூர், 26, மாயனூர் 20, அணைப்பாளையம் 51.20,தொகைமலை, 25. பஞ்சப்பட்டி 25.2, பாலவிடுதி 45.10, கடவூர் 37.40, கிருஷ்ண ராயபுரம் 31,

மைலம்பட்டி45ஆகிய அளவுகளில் மழை பதிவாகிகயுள்ளது. கரூர் மாவட்ட த்தில் மொத்த மழையளவாக 411.30 மி.மீ., மழையும், சராசரியாக 34.28 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது.

**சாத்தையாறு அணையின் நீர்மட்டம் உயர்கிறது; 2000 எக்டேர் பாசன வசதி பெறும்**




**பாலமேடு** : மதுரையில், வறண்ட சாத்தையாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் சில நாட்களாக பெய்யும் மழையால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. உபரி நீர் 11 கண்மாய்களை நிரப்பும் பட்சத்தில் 2,000 எக்டேர் நிலம் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படாது.

அணையின் நீர்மட்டம் 29 அடி. 7 அடி வரை சகதி உள்ளது. எனவே, 22 அடி வரை நீர் இருப்பு வைக்க முடியும். சிறுமலை, வகுத்துஓடை உள்ளிட்ட பகுதியில் இருந்து அணைக்கு நீர் வரத்து உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியில் 26 முதல் 28 மி.மீ., அளவில் தொடர்ந்து மழை பெய்வதால் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. தற்போது அணையில் நீர்மட்டம் 10 அடியாக உள்ளது.11 கண்மாய்கள் நிரம்பும்: சாத்தையாறு அணையின் உபரி நீர், கோணப்பட்டி, சுக்காம்பட்டி, எர்ரம்பட்டி, பாலமேடு உள்ளிட்ட 11 கண்மாய்களில் சேமிக்கப்படுகிறது. இவற்றின் மூலம் 2000 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இரண்டு ஆண்டாக மழை பெய்யாததால் அணை வறண்டது. அணையின் மீன் பண்ணையும் தற்காலிகமாக மூடப்பட்டது. வறட்சியால் 11 கண்மாய்கள் வறண்டன. விவசாயம் செய்ய வழியில்லை. குடிநீர் தட்டுப்பாடு நீங்கியது: தற்போது சாத்தையாறு அணைக்கு பெருமளவு நீர் வழங்கும் சிறுமலையில் தொடர் மழை பெய்கிறது.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியிலும் நல்ல மழை பெய்வதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தற்போது அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அணை நிரம்பி உபரி நீர் 11 கண்மாய்களுக்கும் பாயும்பட்சத்தில் விவசாயம் செழிக்கும். குடிநீர் தட்டுப்பாடும் நீங்கும்.

## மாவட்டத்தில் 4ம் நாளில் 38 மி.மீ., மழை திடீர் காற்றால் வாழை பயிர் சேதம்



**கடலூர்**: மாவட்டத்தில் நான்காம் நாளில் 38 மி.மீ., மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் மாலை காற்று வீசியதில் வாழை பயிர்கள் சேதமடைந்தன.

கடந்த 3ம் தேதி வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மாவட்டத்தில் கடந்த 4ம் தேதி முதல் பரவலாக மழை பெய்து வருகிது. 4ம் தேதி மாவட்டத் தில் சராசரியாக 19.61 மி.மீ., 5ம் தேதி 21.82 மி.மீ., கடந்த 6ம் தேதி 47 மி.மீ., மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

குளிர் காற்று வீசியதால், கத்திரி வெயிலின் தாக்கமின்றி உள்ளது. நான்காம் நாளாக நேற்று முன்தினம் மாலை 6:30 மணி அளவில் கடலூர் பகுதியில் திடீரென காற்றுடன் மழை பெய்தது. அதில், கடலூரை ஒட்டியுள்ள மலைக் கிராமங்களில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் முறிந்து சேதமடைந்தன. அதேபோன்று கரும்புகள் தரையில் சாய்ந்தன. திடீர் காற்றால் வாழை விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகினர். நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை 8:30 மணிவரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பெய்த மழை அளவு மி.மீ., விபரம்: சிதம்பரம் 120, குப்பநத்தம் 59.80, லால்பேட்டை 54, காட்டுமன்னார்கோவில் 52, மே.மாத்தூர் 50, விருத்தாசலம் 48, சேத்தியாத்தோப்பு 46, பெலாந்துறை 46, வேப்பூர் 42, தொழுதூர் 41, கீழ்செருவாய் 32, ஸ்ரீமுஷ்ணம் 30, கொத்தவாச்சேரி

28, காட்டுமயிலூர் 24, புவனகிரி 24, வானமாதேவி 21.80, கடலூர் 20.20, அண்ணாமலை நகர் 2, பரங்கிப்பேட்டை 18, லக்கூர் 13.40, பண்ருட்டி 3 மி.மீ., மழை பெய்துள்ளது. நேற்று காலை முதல் வெயில் சுட்டெரித்து வந்த நிலையில், காலை 11:30 மணி அளவில் மீண்டும் மேகம் சூழ்ந்து குளிர்ந்த காற்றுடன் மழை பெய்தது.

## நாமக்கல் மாவட்டத்தில் 22.29 மி.மீ., மழை பதிவு

**நாமக்கல்**: நாமக்கல் மாவட்டத்தில், சராசரியாக, 22.29 மி.மீ., மழை, நேற்று முன்தினம் பெய்தது. அக்னி வெயில், சில தினங்களுக்கு முன் துவங்கிய நிலையில், கோடை மழை, தமிழகம் முழுவதும் பெய்து வருகிறது. அதில், நாமக்கல் மாவட்டத்தில் மட்டும், நேற்று முன்தினம் பெய்த மழையில், நாமக்கல், 40 மி.மீ., ப.வேலூர், 69 மி.மீ., ராசிபுரம், 16.20 மி.மீ., சேந்தமங்கலம், 13.20 மி.மீ., திருச்செங்கோடு, 7 மி.மீ., எருமப்பட்டி, 20 மி.மீ., மழை பெய்தது. அதேபோல், மங்களபுரம், 21 மி.மீ., புதுச்சத்திரம், 1.50, குமாரபாளையம், 10 மி.மீ., மோகனூர், 25 மி.மீ., என, பரவலாக, 222.90 மி.மீட்டர் மழையும், சராசரியாக, 22.29 மி.மீ., மழையும் பெய்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால், விவசாயிகள், விவசாயப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் பெய்த மழையை போல், நேற்றும் மாவட்டம் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் இருந்தது. அவ்வப்போது, மழை பெய்த வண்ணம் இருந்தது.

## வெற்றிலை விலை 30% உயர்வு : பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

**ப.வேலூர்**: நாமக்கல் மாவட்டம், காவிரி கரையோரப்பகுதிகளான, மோகனூர், மணப்பள்ளி, பாலப்பட்டி, நன்செய் இடையாறு, பொய்யேரி, அணிச்சம்பாளையம், பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, ப.வேலூர் உள்ளிட்ட பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில், வெற்றிலை கொடிக்கால் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, கற்பூரி, வெள்ளைக்கொடி போன்ற ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றை அறுவடை செய்யும் விவசாயிகள், ப.வேலூரில் நடக்கும் தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். ஏலத்துக்கு வரும் வெற்றிலையை, கரூர், சேலம், கோவை, திருச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த

வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். அவற்றை, தமிழகம் மட்டுமல்லாமல், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, உத்தரபிரதேசம் போன்ற வெளிமாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. நேற்று நடந்த ஏலத்தில், வழக்கமாக, 1,500 சுமை வரவேண்டிய வெற்றிலை, வெறும், 500 சுமை மட்டுமே, ப.வேலூர் தினசரி மார்கெட்டுக்கு வந்தது.

அதனால், வெற்றிலையின் விலை, ஒன்றரை மடங்குக்கு, அதாவது, 30 சதவீதம் அளவிற்கு விலை உயர்ந்தது. கடந்த வாரம், 2,500 ரூபாய்க்கு விலைபோன, 104 கவுளி கொண்ட ஒரு சுமை கற்பூரி இளங்கால், நேற்று, ஒரு சுமை, 3,200 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம், 5,000 ரூபாய்க்கு விற்பனையான, வெள்ளைக்கொடி இளங்கால், நேற்று, ஒரு சுமை, 7,000 ரூபாய்க்கு விலைபோனது. 1,900 ரூபாய்க்கு விலைபோன, முதிகால் ஒரு சுமை, 2,200 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த விலை உயர்வு, வெற்றிலை பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## முட்டை விலை 325 காசாக உயர்வு

**நாமக்கல்:** நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 322 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, மூன்று காசு அதிகரித்து, 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்)

நிலவரம்: சென்னை, 357, பெங்களூரு, 340, மைசூர், 349, ஹைதராபாத், 303, மும்பை, 342, விஜயவாடா, 306, கொல்கத்தா, 370, பர்வாலா, 271, டில்லி, 280. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 50 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## வெண்டைக்கு சந்தையில் நல்ல விலை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், வெண்டை காய்க்கு சந்தையில், நல்ல விலை கிடைத்து வருவதால், வெண்டை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டுக்கு, ஆண்டு, பருவமழை விவசாயிகளை ஏமாற்றி வருவதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது. இதனால், விவசாயிகள் நெடுநாள் பயிர்களான கரும்பு, மஞ்சள், மரவள்ளி கிழங்கு ஆகியவற்றை அதிகளவில் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை. மேலும், குறைந்த நாளில் சாகுபடி செய்ய கூடிய, காய்கறி பயிர்களை, கடந்த சில ஆண்டுகளாக, சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, சந்தையில் தொடர்ந்து கட்டுப்படியான விலை கிடைத்து வரும் வெண்டைக்காய், அவரைக்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளை சாகுபடி செய்ய அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து, அதகபாடியை சேர்ந்த விவசாயி காளிதாஸ் கூறியதாவது: வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், மழை பெய்து வருகிறது. ஆனால், தர்மபுரி மாவட்டத்தில், கடந்த, இரு தினங்களாக எதிர்பார்த்தபடி, புயல் மழை கூட பெய்யவில்லை. இதேபோன்று, தொடர்ந்து, பருவ மழையும் விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள், குறைந்த பாசனத்தில் சாகுபடி செய்யக் கூடிய காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, நடவு செய்த, இரண்டாவது மாத இறுதியில் இருந்து, தொடர்ந்து, இரண்டு மாதங்கள் வெண்டைக்காயில் சாகுபடி கிடைக்கிறது. வெண்டைக்காய்க்கு சந்தையில், கிலோ, ஏழு ரூபாய் வரை கிடைத்து வருவதால், அதிக விவசாயிகள் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர், என்றார்.

## கி.கிரியில் கோடை மழை துவக்கம்: எள் பயிரிட அறிவுரை

**கிருஷ்ணகிரி**: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கோடை மழை பெய்ய துவங்கிய நிலையில், மானாவாரியில், எள் சாகுபடி செய்து, விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்,' என்று, வேளாண்மை துறையினர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தி உள்ளனர். இதுகுறித்து, மாவட்ட வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கோடை மழை பரவலாக பெய்து வருகிறது.

இந்த மழையினை பயன்படுத்தி, மானாவரி எள் சாகுபடி செய்வதற்கு, இதுவே தக்க தருணமாகும். விவசாயிகள், விஞ்ஞான தொழில் நுட்பங்களை முழுமையாக கடைபிடித்தால், அதிக மகசூல் பெறலாம். தற்போது, எள்ளில் ஏக்கருக்கு சராசரியாக, 125 முதல், 140 கிலோ மகசூல் தான் பெறப்படுகிறது. வேளாண் துறை பரிந்துரைக்கப்படும் முக்கிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றினால், ஏக்கருக்கு, 225 கிலோவில் இருந்து, 250 கிலோ வரை மகசூல் எளிதாக பெறலாம். ஒரு கிலோ எள், 40 ரூபாய் என்று கணக்கில் கொண்டால் கூட, ஏக்கருக்கு, 9,000 முதல் பத்தாயிரம் ரூபாய் வரை மூன்று மாதங்களில் பெறலாம். ஏக்கருக்கு, இரண்டு கிலோ வீதம், டி.எம்.வி.,3, வி.ஆர்.ஐ.,1, மற்றும் கோ1 ஆகிய ரகங்களில், ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து, தேவையான மணலுடன் கலந்து சீராக விதைக்க வேண்டும். விதை மூலம் பரவும் நோயினை தடுக்க, ஒரு கிலோ விதையுடன், இரண்டு கிராம் கார்பென்டசிம் அல்லது, நான்கு கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன், விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயிர்களுக்கு, இயற்கையாகவே தழைச்சத்து கிடைக்க ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன், ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை, ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைத்து பின், விதைக்க வேண்டும். ஏக்கருக்கு, அடி உரமாக, ஐந்து டன் தொழு உரம் இட்டு, அதனுடன் தழை, மணி சாம்பல் சத்து தரவல்ல, 20 கிலோ யூரியா, 31 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும், 9 கிலோ மூரியேட்ஆப் பொட்டாஸ் உரத்தினை அடி உரமாக இடவேண்டும். விதைத்த, 15 வது நாள் செடிக்கு, செடி, 15 செமீ இடைவெளி இருக்கும்படியும், 30வது நாளில் செடிக்கு செடி, 30 செ.மீ., இடைவெளி உள்ளவாறு வைத்து, மற்ற செடிகளை அகற்றி விட வேண்டும். செடிகளை கலைத்து விடும்போது, வயலில் போதுமான ஈரம் இருப்பது நல்லது. எள் பயிரில் பயிர் கலைத்தல், ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறு செய்யாவிட்டால் மகசூல் கணிசமாக குறையும். எனவே, கோடை மழையை பயன்படுத்தி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மானாவாரியில், எள் சாகுபடி செய்து, அனைத்து தொழில் நுட்பங்களை கடைபிடித்து, அதிக மகசூல் பெற்று பயன் பெறலாம், என்றனர்.

## கோபியில் அதிக மழைபதிவு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், மிக அதிக மழையளவாக, கோபியில் பதிவாகி உள்ளது. வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுநிலை ஏற்பட்டதால், மாநில அளவில், பரவலாக மழை பெய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில், கடந்த மூன்று நாட்களாக மழை பெய்கிறது. நேற்று முன்தினம், பவானிசாகர், 13.2 மி.மீட்டர், ஒரத்துபாளையம், 20, மேட்டூர், 12.4, சத்தியமங்கலம், 14, கொடிவேரி, 12, கோபி, 25, கவுந்தப்பாடி, 15.4, பெருந்துறை, 14, பவானி, 14.2, புங்கம்பாடி, 16, ஈரோடு, 10, மொடக்குறிச்சி, 14, அரச்சலூர், 11, சென்னிமலை, 16, முத்தூர், 17, மங்களப்பாடி, 12, வெள்ளகோவில், 23.8, காங்கேயம், 17.2 மி.மீட்டர் என மழையளவு பதிவாகி உள்ளது. கடந்த, மூன்று நாட்களாக பெய்து வரும் மழையால், வானிலையில் மாற்றம் ஏற்பட்டு, ஜில்லென்ற காற்று வீசி வருகிறது.

## தொடர் மழை எதிரொலி கொப்பரை விலை சரிவு

**கோபிசெட்டிபாளையம்**: தொடர் மழை எதிரொலியாக, கொப்பரை உற்பத்தி பாதித்து, கிலோ, ஐந்து ரூபாய் உயர்ந்தது.

கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு, கடந்த வாரம், ஒரு கிலோ, 100 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 320 மூட்டை கொப்பரை வரத்தானது.

நடப்பு வாரம் பெய்த மழையால், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டது. கிலோவுக்கு, ஐந்து ரூபாய் உயர்ந்து, ஒரு கிலோ, 105.09 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

136 மூட்டை கொப்பரை வரத்தானது. கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறுகையில், "கோபி சுற்று வட்டாரத்தில், 1,000க்கும் மேற்பட்ட, தென்னை விவசாயிகள், கொப்பரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த, இரண்டு நாட்களாக, மழை மற்றும் மேக மூட்டம் காரணமாக, கொப்பரை காய வைக்க முடியாத நிலை உள்ளது.

ஐந்தாறு நாட்களில் உற்பத்தி செய்யப்படும் கொப்பரை, பத்து நாட்கள் வரை, காய வைக்க வேண்டி உள்ளது,' என்றனர்.

## மழை தொடர்கிறது; மகிழ்ச்சியும் கூடுகிறது

**பொள்ளாச்சி** : பொள்ளாச்சி பகுதியில், மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதியில், கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது; குளம், குட்டைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. அணை நீர்மட்டம்: பரம்பிக்குளம்- 15.63 அடி, நீர்வரத்து-279, வெளியேற்றம்- 317, மழையளவு-38.0 மி.மீ., ஆழியாறு-78.80அடி நீர்வரத்து-324, வெளியேற்றம்-374, மழையளவு-48.6மி.மீ.,நேற்றைய நிலவரப்படி மழையளவு (மி.மீ.,): அப்பர் நீராறு-21.0, லோயர் நீராறு-12.0, வால்பாறை-30.0, வேட்டைக்காரன்புதூர்-36.0, பொள்ளாச்சி-18.0, மனக்கடவு-55.6, நல்லாறு-96.0, நவமலை-39.5, நெகமம்-8.0, துாணக்கடவு-103, பெருவாரிப்பள்ளம்-97.0, காடம்பாறை-49.5 மி.மீ., மழையளவும் பதிவாகியிருந்தது.

## சந்தையில் கலக்கும் "சிம்ரன்' தர்ப்பூசணி

***திருச்சி***: அதிகச்சாறு கொண்ட "சிம்ரன்' தர்ப்பூசணி திருச்சி பழச்சந்தை விற்பனையில் கலக்கி வருகிறது. தமிழகத்தில் உணவுப்பொருட்களுக்கு நடிகைகள் பெயர் சூட்டுவது என்பது வாடிக்கையாகிவிட்டது. மதுரை இட்லிக்கு அடுத்தபடியாக, "குஷ்பு' இட்லி இன்றும் அழியாத பெயருடன் நிலைத்து நின்று தமிழர்களின் பெருமையை (!) பறைசாற்றுகிறது. அந்த வகையில், தர்ப்பூசணி பழத்துக்கு "சிம்ரன்' பெயர் சூட்டியுள்ளனர் பழம் வியாபாரிகள். மைசூர் பகுதியில் அதிகளவு விளைவிக்கப்பட்டு வந்த "ஹைப்ரீட்' ரக "கிரன்' தர்ப்பூசணி பழங்களுக்கு மார்க்கெட்டில் கிராக்கி உள்ளது. நாட்டுப்பழங்கள் வரத்து குறையத்துவங்கியதும், இந்த பழம் அதிகளவு விற்பனையாகும். ஆனால், வெறுமன விற்பனை செய்தால், கட்டுப்படியாகாது என்பதால், "கிரன்' தர்ப்பூசணிக்கு, "சிம்ரன்' என பெயரிட்டனர். அதன்பின், இப்பழம் விற்பனையில் தனி மார்க்கெட் பிடித்தது. இதுகுறித்து பழம் வியாபாரி ஒருவர் கூறுகையில், ""பிற தர்ப்பூசணி பழங்கள் போலவே இந்த பழமும் விற்பனையானது. வியாபார "கவர்ச்சி'க்காக "சிம்ரன்' என பெயரிட்டோம். பரவாயில்லை.. நல்ல விற்பனை

நடக்கிறது. இப்பழத்தில் சாறு அதிகம் கிடைக்கும். எனது கடையில் மட்டும் கோடையில் நாள்தோறும், 700 கிலோ பழம் விற்பனையாகும்," என்றார்.

## நிதானமாய் தொடரும் கோடை மழை; கடந்தாண்டை விட அதிகரிப்பு

**திருப்பூர்** : திருப்பூர் மாவட்டத்தில், மூன்றாவது நாளாக நேற்றும் தொடர் மழை பெய்தது. கடந்த ஆண்டை காட்டிலும், இந்தாண்டு கோடை மழை கூடுதலாக பெய்து வருவது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளாக பருவ மழை குறைவால் கடும் வறட்சி ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. கடந்த 7ம் தேதி காலை 7.00 மணி நிலவரப்படி, 46.40 மி.மீ., மழை பதிவாகியிருந்தது. நேற்று முன்தினம் காலை 7.00 மணி முதல் நேற்று காலை 7.00 மணி வரையிலான மழையளவு, திருப்பூரில் 5 மி.மீ., அவிநாசியில் 25; உடுமலையில் 5.4; பல்லடத்தில் 4; தாராபுரத்தில் 23; காங்கயத்தில் 17.20; மூலனூரில் 36 மி.மீ., மழை பதிவாகியிருந்தது. கடந்தாண்டு பெய்த கோடை மழையளவை விட, இந்தாண்டு கூடுதலாக பெய்துள்ளது. கடந்தாண்டு, மார்ச் 1.49; ஏப்., 16.75; மே 21.23 என கோடை காலத்தில் 39.47 மி.மீ., பெய்திருந்தது. இந்தாண்டு, கடந்த இரண்டு நாட்களில், 62.91 மி.மீ., பெய்துள்ளது. இதில், அதிகபட்சமாக மூலனூரில், 112 மி.மீ.,; காங்கயத்தில் 88 மி.மீ., பெய்துள்ளது. குறைந்த அளவாக, திருப்பூரில் 29 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. கடந்த ஆண்டை காட்டிலும் மழை கூடுதலாக பெய்திருந்தாலும், ஆண்டு சராசரி அளவை ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. மாவட்டத்தின் ஆண்டு சராசரி கோடை மழையளவு 124.20 மி.மீ., முதல் இரண்டு மாதங்கள் கோடை மழை ஏமாற்றியதால், பாதியளவு மழை மட்டுமே பெய்துள்ளது.

மழை நீர் வெளியேறும் கட்டமைப்புகள் போதுமானதாக இல்லாததால், கழிவு நீருடன் ஓடிய மழை நீர் ரோட்டில் தேங்கியது. சேறும் சகதியுமாக ரோடு மாறியுள்ளது. சாக்கடை குப்பை, ரோட்டில் தேங்கியுள்ளது. தினசரி மார்க்கெட், உழவர் சந்தை பகுதியில் நடக்க முடியாத அளவுக்கு வழித்தடம் மாறியுள்ளது. குப்பைகளால் துர்நாற்றம் வீசுகிறது. மூன்று நாட்களாக நிதானமாக பெய்து வரும் மழையால், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து வருகிறது; விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தென்னை உள்ளிட்ட நிலைப்பயிர்களுக்கு பயனுள்ளதாக

அமைந்துள்ளது. இம்மழையை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யும்போது, மண்ணுக்குள் இருக்கும் கூண்டு பூச்சிகள், களை விதைகள் அழிய வாய்ப்புள்ளது.உழவு செய்யும்போது, மண்ணின் மேற்பரப்பு இலகுவாகி, அடுத்து பெய்யும் மழை நீர், நிலத்துக்குள் இறங்கும். அதேபோல், மண்ணின் தரமும் உயர்ந்து, சாகுபடி பயிர்களும் நன்கு வளரும். ஜூன் மாதத்தில், திருப்பூர், பெருமாநல்லூர், ஊத்துக்குளி, குன்னத்தூர், அவிநாசி வடக்கு பகுதிகளில், மானாவாரி நிலக்கடலை சாகுபடி மேற்கொள்ளப்படும். எனவே, தற்போதைய மழையை பயன்படுத்தி, விவசாயிகள், கோடை உழவுக்கு தயாராக வேண்டும் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## வறட்சியில் தப்பிய அணைகள்: கை கொடுத்தது மழை

**உடுமலை** : தொடர் மழை காரணமாக, அமராவதி, திருமூர்த்தி அணைகள் வறட்சியிலிருந்து தப்பியுள்ளன; கோடை காலத்தில், குடிநீர் திட்டங்கள் முடங்கும் அபாயமும் நீங்கியுள்ளது.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், கடந்த இரண்டு நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று அமராவதி அணைப்பகுதியில், 5 மி.மீ., நல்லாறு 93 மி.மீ., உடுமலை நகரம் 5.4 மிமீ., உப்பாறு அணைப்பகுதியில், 9 மி.மீ., மழையளவும் பதிவாகியிருந்தது. நேற்று பகலிலும் சாரல் மழை பரவலாக உடுமலை பகுதியில் பெய்தது. இம்மழை காரணமாக, அமராவதி மற்றும் திருமூர்த்தி அணைகள் வறட்சியிலிருந்து மீண்டுள்ளன. அமராவதி அணையின் நீர் மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்து நேற்றைய காலை நிலவரப்படி, 21 அடியாக இருந்தது. அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில், பெய்ய துவங்கியுள்ள மழை காரணமாக நிலையான நீர் வரத்தும் அணைக்கு கிடைத்து வருகிறது.

மழை துவங்கும் முன் அணையின் நீர் மட்டம், வறளும் நிலையில் இருந்தது. இதனால், அமராவதி ஆற்று படுகையை அடிப்படையாக கொண்ட கூட்டுக்குடிநீர் திட்டங்கள் முடங்கும் அபாயம் இருந்தது.இதே போல், திருமூர்த்தி அணை நீர் மட்டமும், உடுமலை பகுதியிலுள்ள குளங்களுக்கு தண்ணீர் திறப்பு போன்ற காரணங்களால் குறைந்திருந்தது. காண்டூர் கால்வாயை பராமரிப்பு பணிகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என்பதால், மழை துவங்கும் முன் அணையிலிருந்த நீர் மட்டத்தை கொண்டு, உடுமலை நகராட்சி உட்பட கூட்டுக்குடிநீர் திட்டங்களுக்கு

போதுமான குடிநீர் கோடை காலத்தில் வழங்குவது கேள்விக்குறியாக இருந்தது. தற்போது, அணையின் நீர் பிடிப்பு பகுதியான நல்லாற்றில் இரண்டு நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது.இரண்டு நாட்களில், 193 மி.மீ., மழையளவு அப்பகுதியில் பதிவாகியுள்ளது. தொகுப்பு அணைகளுக்கும் நீர் வரத்து கிடைத்து வருவதால், கோடை காலத்தில், கூட்டுக்குடிநீர் திட்டங்கள் முடங்கும் அபாயத்திலிருந்து நீங்கியுள்ளன. இதே போல், உடுமலை பகுதியிலுள்ள குளங்கள் பி.ஏ.பி., பாசனத்திட்டத்தின் மூலம் நிரப்பபட்டுள்ள நிலையில், மழையால், கிராமங்களின் உள்ளூர் நீராதாரமான போர்வெல்களுக்கும் வரத்து கிடைக்க துவங்கியுள்ளது. வறட்சியின் பிடியில் தவித்து வந்த உடுமலை பகுதிக்கு தொடர் மழை சிறிது ஆறுதல் அளித்துள்ளது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 278 மி.மீ., மழைப்பதிவு

**பெரம்பலூர்**: பெரம்பலூர் மாவட்டத்தில் நேற்று 278 மில்லி மீட்டர் மழை பெய்ததால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் 7ம் தேதி இரவு 8 மணி முதல் 8ம் தேதி காலை 8 மணி வரை செட்டிக்குளத்தில் 47 மில்லி மீட்டரும், பெரம்பலூரில் 75 மில்லி மீட்டரும், வேப்பந்தட்டையில் 76 மில்லி மீட்டரும், தழுதாழையில் 51 மில்லி மீட்டரும், பாடாலூரில் 29 மில்லி மீட்டரும் என மொத்தம் 278 மில்லி மீட்டர் மழை பெய்தது. இது சராசரியாக 55.60 மில்லி மீட்டர் மழை ஆகும். நேற்று மாலை 4 மணியளவில் பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இதில் பெரம்பலூர் அருகே செட்டிக்குளம் செல்லும் வழியில் செஞ்சேரியில் பெரிய புளிய மரமும், பெரம்பலூரில் துறைமங்கலம் எஸ்.பி., வீட்டு முன்பின்ற பெரிய வாகை மரமும் முறிந்து விழுந்தது.

## ஆலங்குடியில் 64 மி.மீ., மழை

**புதுக்கோட்டை**: புதுக்கோட்டை மாவட்டத்தில் 3வது நாளாக நேற்றும் அவ்வப்போது மழை பெய்தது. அதிகபட்சமாக ஆலங்குடியில் 64 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 6ம் தேதி முதல் கோடை மழை பெய்து அம்மாவட்ட மக்களை குளிர்வித்து வருகிறது. 3வது நாளாக நேற்றும்

மழை நீடித்தது. சாரலுடன் அவ்வப்போது பலத்த மழையும் பெய்தது. அதிகபட்சமாக ஆலங்குடியில் 64 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் 739 மி.மீ., மழையும், சராசரியாக 30 மி.மீ.,மழையும் பெய்துள்ளது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெய்துள்ள மழையளவு(மி.மீ) விவரம் கீழ்வருமாறு:

புதுக்கோட்டை-16, பெருங்களூர்-48, ஆதனக்கோட்டை-23, இலுப்பூர்-38, அன்னவாசல்-32, குடுமியான்மலை-27, விராலிமலை-37, கீரனூர்-17, உடையாளிப்பட்டி-23, திருமயம்-30, அரிமளம்-26, கீழாநிலை-20, காரையூர்-17, பொன்னமராவதி-34, கறம்பக்குடி-10, மழையூர்-27, கந்தர்வக்கோட்டை-36, அறந்தாங்கி-45, ஆயிங்குடி-27, நாகுடி-25, மணமேல்குடி-24, கட்டுமாவடி-22, ஆவுடையார்கோவில்-32, மீமிசல்-38 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் மேலும் மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டு வருகிறது.

## டெல்டா மாவட்டத்தில் பெய்த மழையளவு

**தஞ்சாவூர்**: டெல்டாவில், பிரதானமாக இடம்பெற்றுள்ள தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய 3 மாவட்டங்களில் நேற்றுக்காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழையளவு விபரத்தை அந்தந்த கலெக்டர் அலுவலக மழையளவு பதிவு பிரிவு அலுவலர்கள் பதிவு செய்து, வெளியிட்டுள்ளனர். தஞ்சை, நாகை, திருவாரூர் உள்பட டெல்டா மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து பலமாகவும், சில இடங்களில் லேசாகவும் கடந்த 2 தினங்களாக மழை பெய்து வருகிறது. தினமும் காலை 8 மணி, இரவு 6 மணிக்கு என, இருமுறை அன்றைய மழையளவு குறி த்து விபரம் அந்தந்த மாவட்ட கலெ க்டர் அலுவலகத்திலுள்ள மழையளவு பதிவு அலுவலகத்தில் அலுவலர்கள் சேகரித்து, குறித்து வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். டெல்டாவில், பிரதான இடத்தை வகிக்கும் தஞ்சை மாவட்டத்தில், கடந்த 3ம் தேதி முதல் மழை அவ்வப்போது பெய்து வருகிறது. நேற்றுக்காலை 6 மணி முதல் 8 மணி வரை லேசாக மழை பெய்தது. தொடர்ந்து, 8 மணிக்கு மேல் மதியம் வரை தூரல் மழை தலைகாட்டியதால், மக்கள் நிம்மதியடைந்தனர். டெல்டாவில் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் பெய்த மழையளவு, நேற்றுக்காலை 8 மணி நிலவரப்படி மி.மீட்டரில் வருமாறு: தஞ்சை மாவட்டம்: கல்லணை 42, திருக்காட்டுப்பள்ளி 9.2,

திருவையாறு 10, தஞ்சை 9.6, பாபநாசம் 23, கும்பகோணம் 45, அணைக்கரை 73, மஞ்சலாறு 68, கொள்ளிடம் 20.5, கோரையாறு தலைப்பு 54.8, பூதலூர் 15.2, வல்லம் 8, வெட்டிக்காடு 26.8, ஈச்சன் விடுதி 36, பேராவூரணி 22.2, ஆயங்குடி 27, நாகக்குடி 25, ஒரத்தநாடு 12.8, மதுக்கூர் 37.4. பட்டுக்கோட்டை 30 மி.மீ., ந ாகை மாவட்டம்: வேதாரண்யம் சுற்றுவட்டார பகுதியில் கடந்த 3 தினங்களாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக வேதாரண்யத்தில் வானம் மேகமூட்டமாக நேற்று காட்சியளித்தது. அவ்வப்போது, அரைமணி நேரம் விட்டு, விட்டு மழை பெய்தது. இதனால், நகர மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது. நாகை மாவட்டத்தில், நாகை, வேதாரண்யம், தலைஞாயிறு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்றும் மழை பெய்தது. அதன்விபரம்: நாகை-33.6, வேதாரண்யம் 52.2, தலைஞாயிறு 60.4, திருப்பூண்டி 55.4, மயிலாடுதுறை 35, தரங்கம்பாடி 17, சீர்காழி 23, கொள்ளிடம் 20.5. திருவாரூர் மாவட்டம்: குடவாசல் 102.4, நன்னிலம் 48.2, நீடாமங்கலம் 52.9, நெய்வாசல் தென்பாதி 51, மன்னார்குடி 56, முத்துப்பேட் டை 75.2, பாண்டவையாறு தலை ப்பு 58.6, முல்லையாறு தலைப்பு 66.2, திருத்துறைப்பூண்டி 55.4, திருவாரூர் 72.6 மி.மீ.,

## அரவைக்கு **1,000** டன் நெல் மூட்டை பயணம்

**தஞ்சாவூர்**: தஞ்சையிலிருந்து அரவை பணிக்காக, மதுரைக்கு, 1,000 டன் நெல் மூட்டைகளை, ரயிலில், 21 வேகன்களில் ஏற்றி, தஞ்சை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா அறுவடை பணிகள் நிறைவை எட்டியுள்ளன. வயலில் அறுவடையான நெல் அரசின் நுகர்பொருள் வாணிபக்கழக கொள்முதல் நிலையங்கள் மூலம், சேமிப்பு கிடங்குக்கு அனுப்பப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. அவ்வப்போது தேவைக்கேற்ப வெளிமாவட்டங்களுக்கு அரவைக்காக நெல் மூட்டை, மூட்டையாக ரயிலில் அனுப்பப்படும். இதனை நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் மேற்பார்வையிட்டு, அனுப்பி வைக்கின்றனர். இதேபோல, தஞ்சையில் இருந்து கடந்த, 7ம் தேதி ரயில் மூலம், 1,000 டன் எடையுள்ள நெல் மூட்டைகள் மதுரைக்கு அரவை பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டது. சேமிப்பு கிடங்கில் இருந்து, 90 லாரிகளில், 23 ஆயிரத்து, 850 மூட்டை நெல் தஞ்சை ரயில்வே ஸ்டேஷனுக்கு ஏற்றி வரப்பட்டது. தொடர்ந்து, ரயிலில், 21 வேகன்களில்

1,000 டன் எடையுள்ள நெல் மூட்டைகள் மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இப்பணியை தஞ்சை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் மேற்பார்வையிட்டு அனுப்பி வைத்தனர்.

## பண்ணைக்காட்டில் 140. மி.மீ., மழை

**தாண்டிக்குடி** : தாண்டிக்குடி மலைப்பகுதியில் கடந்த இருதினங்களாக கோடை மழை கொட்டி தீர்த்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்தால், நீர் நிலைகள் வறண்டு, நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது. விவசாயம், குடிநீர் பிரச்னை எழுந்தது. கடந்த இரண்டு நாட்களாக தாண்டிக்குடி மலைப்பகுதி முழுவதும் விடிய, விடிய கனமழை கொட்டி தீர்த்தது. அதிகபட்சமாக பண்ணைக்காட்டில் 140.மி.மீ., தடியன்குடிசை, தாண்டிக்குடியில் தலா 100.மி.மீ., மழை பதிவாகியுள்ளது. வறட்சியில் வறண்ட சிற்றோடைகள், மருதாநதி ஆறு, அருங்கானல், குடகனாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் மருதாநதி, ஆத்தூர் நீர்தேக்கம், மஞ்சளாறு, பரப்பலாறு அணைகளுக்கு கனிசமாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. தொடர்மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். காலம் கடந்து பெய்த மழை, மலை விவசாயப்பயிர்களான மிளகு, காபி, வாழை, அவக்கடா, அவரை, பீன்ஸ், சவ்சவ், முட்டைகோஸ் பயிர்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. மலைப்பகுதியில் நீடித்த குடிநீர் பிரச்னை, இந்த மழையால் குறைந்துள்ளது. தடியன்குடிசை நறுமண சுற்றுலா மையத்தில் சீதோஷ்ண நிலை இதமாக இருப்பதால் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

## பரப்பலாறு அணையில் 34 மி.மீ. மழை பதிவு

**ஒட்டன்சத்திரம்** : ஒட்டன்சத்திரம் பரப்பலாறு அணை பகுதியில் 34 மி.மீ மழை பொழிவு இருந்த போதிலும், அணைக்கு நீர்வரத்து இல்லை. ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் குடிநீர் பிரச்னை தீர்க்கவும், மற்ற இடங்கள் நிலத்தடி நீர்மட்டம் உயரவும் காரணமாக இருப்பது மலைப் பகுதியில் அமைந்துள்ள பரப்பலாறு அணை தான். கடந்த ஆண்டு இப்பகுதியில் மழை பெய்யாததால், அணை நிரம்பவில்லை. இதனால் ஒட்டன்சத்திரம் பகுதியில் குடிநீர்

தட்டுப்பாடு ஏற்பட்டது. அணையில் நீர்மட்டம் குறைந்ததால், குடிநீருக்கு திறந்துவிடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது. கடந்த 2 நாட்களாக ஒட்டன்சத்திரம் மற்றும் மலைப் பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் அணைப்பகுதியில் 34 மி.மீ மழை பெய்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்த போதிலும், வறட்சி காரணமாக மழைநீர் அனைத்தையும் நிலம் ஈர்த்துக் கொண்டது. இதனால் அணைக்கு நீர்வரத்து இல்லை.

## சோத்துப்பாறை நீர்மட்டம் ஒரே நாளில் 25 அடி உயர்வு

**பெரியகுளம்**: சோத்துப்பாறை நீர்ப்பிடிப்பு பகுதியில், 60 மி.மீ., மழை பெய்ததால், அணையின் நீர் மட்டம் ஒரே நாளில் 25 அடி உயர்ந்துள்ளது. பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ., தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது.

அணையின் மொத்த நீர் மட்டம் 126 அடி. கடந்தாண்டு நவ.,5ல் அணை நிரம்பியது, டிச.,12ல் விவசாயத்திற்காக திறந்து விடப்பட்டது. அணையின் நீர் மட்டம் குறைந்ததால், 2014 ஜன., 19ல் தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டது. தொடர்ந்து, நீரின் அளவு ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே இருந்தது. கடந்த வாரம் வெயிலின் தாக்கம் அதிகரித்ததால், அணை நீர் மட்டம் தரைமட்டத்திற்கு வந்தது.

அக்னிநட்சத்திரத்தின் கொடை: மே 4ல் சோத்துப்பாறை நீர்பிடிப்பு பகுதியில், 10மி.மீ., மழை பெய்தது, அணை நீர்மட்டத்தை 45 அடியில் இருந்து, 50 அடியாக உயர்த்தியது. மே 5ல், 28 மி.மீ., மே 6ல், 2 மி.மீ., நேற்று முன்தினம் மே 7ல், 60 மி.மீ., மழை பெய்ததது. அணைக்கு 257 கனஅடி நீர் வந்ததால், நீர்மட்டம் ஒரே வாரத்தில் 35 அடி உயர்ந்தது.

தற்போது உயரம் 85.60 அடி உள்ளது. நீர் பிடிப்பு பகுதியில், தொடர்ந்து மழை பெய்வதால், நீர் மட்டம் மேலும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயக்கட்டுதாரர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அணையின் கீழ் பகுதியில் செல்லும், பெரியகுளம் வராகநதியிலும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

**சோத்துப்பாறையில் 60 மி.மீ, மழை**

**தேனி** : மாவட்டத்தில், சோத்துப்பாறையில் அதிக பட்சமாக 60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. தேனி மாவட்டத்தில், கத்திரி வெயில் தொடங்கியதில் இருந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு, சாரல் மழை பெய்து வருகிறது. மலைப்பகுதியில் கன மழை பெய்ததால், நீர் வரத்து அதிகரித்துள்ளது. குமுளி மலைப்பாதையில் மண் சரிவு ஏற்பட்டது. மக்கள் வசிக்கும், நிலப்பரப்பில், பலத்தகாற்று இல்லாமல் சாரல் மழை பெய்து வருவதால், மழையால் குடியிருப்புகளில் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.இதனால், நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கு வாய்புள்ளது. வெயில் துவங்கியவுடன் மானாவரி விதைப்பு தொடங்கிவிடும். நேற்றும், அவ்வப்போது சாரல் மழை பெய்தது. நேற்று காலை 8 மணி வரை 24 மணி நேரத்தில் பதிவான மழை விவரம்: ஆண்டிபட்டி-15.2, அரண்மனைபுதூர்-7.2, போடி -27.4, கூடலூர்-41, மஞ்சளாறு - 48, பெரியகுளம் - 35, பெரியாறு - 28, சோத்துப்பாறை -60, தேக்கடி - 51.4, உத்தமபாளையம் - 59, வைகை அணை- 15.4, வீரபாண்டி - 26, என 413.6 மி.மீ. மழை பெய்துள்ளது. சராசரி மழையளவு- 34.47 மி.மீ. ஆகும்.

**தொடர்மழையால் துளிர்விடும் விவசாயம்; பாதைகளை சீரமைத்த விவசாயிகள்**

**ராஜபாளையம்** : மேற்கு தொடர்ச்சி மலையில் இருநாட்களாக தொடர்மழை பெய்ததால், ராஜபாளையம் மலையடிவார பகுதிகளில், விவசாயத்திற்கு பயன்படும் பாதைகளை சீரமைக்கும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். ராஜபாளையத்தில் கடந்த இருஆண்டுகளாக தொடர்மழை இல்லை. நகரின் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. நகராட்சி சார்பில் வறட்சி நிவாரண நிதியில் அமைக்கப்பட்ட, ஆழ்துளைகுழாய்கள், காட்சி பொருளாக மாறின. மலையடிவாரத்தில் உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், தென்னை, மா, வாழை, பலா விவசாயம் கேள்விக்குறியானது. இது தவிர, கண்மாய் விவசாயமும் நடக்கவில்லை. இந்நிலையில், மே 1ல் 16மி.மீ., 3ல் 6, 4ல் 52, 7ல் 40மி.மீ., என, மழை பெய்தது. இதனால், கண்மாய்களுக்கு நீர் வர துவங்கி உள்ளது.விவசாய பணிகளில் விவசாயிகளும் ஈடுப்பட துவங்கி விட்டனர்.விவசாயம் குறைந்ததால், கண்மாய்கரை பாதைகள் சேதமடைந்தன. தற்போதைய மழையால்,இந்த பாதைகள், விவசாயத்திற்கு பயன்படும் என்பதால், சீரமைப்பு பணிகள் நடந்து

வருகிறது. புதுக்குளம் கண்மாய்கரையில், டிராக்டரில் மண் கொண்டு வரப்பட்டு, கரை பாதை பள்ளங்களில் கொட்டப்பட்டு, விவசாயிகளே சீரமைப்பு பணியில் ஈடுப்பட்டனர்.

## உயர்ந்தது கத்திரிக்காய் விலை

**ராஜபாளையம்** : தொடர்மழையால், வரத்து குறைந்த நிலையில்,நேற்று கத்திரிக்காய் கிலோ 40 ரூபாய் முதல் 60 வரை,ராஜபாளையத்தில் விற்பனையானது. ராஜபாளையத்தை சுற்றி உள்ள கிராமங்களில், நாட்டு காய்கறி விவசாயம் நடக்கிறது. இந்த காய்கள் அதிகாலை பறிக்கப்பட்டு, ராஜபாளையம் தனியார் மார்க்கெட் மற்றும் உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும். கடந்த சில நாட்களாக, தொடர்மழையால், காய்களை பறிக்க ஆள் பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும், மழையால், விளைநிலங்களுக்கு வாகனங்கள் செல்ல வசதி இல்லாததால், காய் பறிக்கப்படவில்லை. இதனால் நேற்று, காய்கறி வரத்து குறைந்தது. கடந்த வாரம் 30 ரூபாய்க்கு விற்கப்பட்ட, கத்திரிக்காய், நேற்று கிலோ 40 ரூபாய் என விற்கப்பட்டது. 60 ரூபாய்க்கு விற்கப்பட்ட அவரைக்காய் 80க்கு விற்றது . வியாபாரி கண்ணன் கூறுகையில், "" மழையால், காய்களின் வரத்து குறைந்து உள்ளதே, விலை ஏற்றத்திற்கு காரணம்," என்றார்.

## குமரியில் கனமழை நீடிப்பு

**நாகர்கோவில்** : குமரி மாவட்டம் முழுவதும் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வந்தது. இந்த நிØயில் கன்னியாகுமரி அருகே கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மெல்ல மெல்ல வலுப்பெற்று வந்தது. இதன் காரணமாக கடந்த இரண்டு நாட்களாக தென் மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. பல்வேறு இடங்களில் நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள் ஆகியவற்றில் தண்ணீர் பெருக்கொடுத்து ஓடுகிறது. மலை பகுதிகளிலும் கன மழை இருந்ததால் அணைகளுக்குான நீர் வரத்தும் உயர்ந்துள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்று காலை நிலவரப்படி 462 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. அணையின் நீர் மட்டம் 17.05 அடியானது. இதே போல் பெருஞ்சாணி அணைக்கு வரும் நீரின் அளவு 334 கன அடியாக உயர்ந்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நீதி மட்டுமல்ல, இயற்கையும் சாதகமே

## முல்லை பெரியாறில் 142 அடிக்கு தண்ணீரை தேக்க வாய்ப்பு



**மதுரை** : வரும் ஜூன் மாதம் பெய்யும் பருவமழையை பயன்படுத்தி முல்லைப் பெரியாறில் 142 அடி அளவுக்கு நீரை தேக்க தமிழக அரசு விரைந்து செயல்படுமா என்று தென்மாவட்ட விவசாயிகள் காத்திருக்கிறார்கள். முல்லை பெரியாறு அணை 152 அடி உயரம் கொண்டது. 1979ல் அணை பலம் இழந்துள்ளதாக கேரளா கூறியதை தொடர்ந்து நீர் தேக்கும் அளவு 136 அடியாக குறைக்கப்பட்டது. அணையை தமிழக அரசு பலப்படுத்தி முடித்த பிறகு மீண்டும் 152 அடியாக உயர்த்தி கொள்வது என அப்போது இரு மாநில அரசுகளும் சம்மதம் தெரிவித்தன. ஆனால், அணையை பலப்படுத்தி முடித்த பிறகும் நீர்மட்டத்தை உயர்த்த கேரளா பிடிவாதமாக மறுத்தது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்தது.கடந்த 2006 பிப்ரவரியில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் ‘142 அடியாக உயர்த்தலாம், அணை பலப்படுத்தும் பணி முழுமை அடைந்ததும் 152 அடியாக உயர்த்தலாம்‘ என தெரிவித்தது. ஆனால், பெரியாறு அணை உடையும் அபாயத்தில் உள்ளது. அதன் அருகில் புதிய அணை கட்ட அனுமதிக்கவேண்டும் என உச்சநீதிமன்றத்தில் கேரளா வழக்கு தொடர்ந்தது. தமிழக அரசும், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 142 அடி தேக்க அனுமதிக்கும்படியும், கேரள சட்டத்தை எதிர்த்தும் வழக்கு தொடர்ந்தது. இரு மாநில வழக்குகளையும் விசாரித்த

உச்சநீதிமன்றம் 142 அடியாக உயர்த்தலாம், அணையை முழுமையாக பலப்படுத்திய பிறகு 152 அடியாக உயர்த்தலாம் என்றும், கேரளாவின் சட்டம் செல்லாது என்றும் அதிரடியாக தீர்ப்பளித்துள்ளது. இது தமிழகத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இந்தநிலையில், கேரளாவில் அடுத்த மாதம் தென்மேற்கு பருவமழை சீசன் தொடங்குகிறது. இந்த நேரத்தில் பெரியாறு அணைக்கு நீர்வரத்து மிக அதிகமாக இருக்கும்.உச்சநீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்தும் வகையில், நீர்மட்டத்தை 136ல் இருந்து 142 அடியாக உயர்த்த இது தமிழகத்துக்கு கிடைக்கும் அரிய வாய்ப்பு. இந்த சீசனில் வாய்ப்பை தவற விட்டால், அடுத்த பருவமழை சீசனில் தான் மீண்டும் வாய்ப்பு ஏற்படும். அதுவரை காத்திருக்க வேண்டும். அதற்குள் காலதாமதம் ஏற்பட்டு, 2006 பிப்ரவரியில் முதல் தீர்ப்பின்போது கேரளா முட்டுக்கட்டை போட்டது போன்று மீண்டும் சூழ்ச்சி திட்டத்தை அரங்கேற்றி விடக்கூடாது என பெரியாறு பாசன விவசாயிகள் அச்சப்படுகின்றனர். எனவே, வரும் தென்மேற்கு பருவமழை சீசனிலேயே 142க்கு உயர்த்தி காட்ட 13 ஷட்டர்களையும் உடனடியாக இறக்க தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு உத்தரவு பெறவேண்டும் என்பதே விவசாயிகள் எதிர்பார்ப்பு. அதிகாரிகளிடம் கேட்டதற்கு, ‘அரசின் உத்தரவு வரட்டும்‘ என்கின்றனர்.

### நடப்பு ஆண்டில் 96 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி



**புதுடெல்லி**: காலம் கடந்து கோதுமை அறுவடை தொடங்கியதால் அவற்றை கொள்முதல் செய்யும் பணி தீவிவரமாக நடக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை வரை 23.10 மில்லியன் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் 22.80 மில்லியன் டன் மட்டுமே கொள்முதல்

செய்யப்பட்டது என்றும் இந்திய உணவுக் கழக (எப்சிஐ) அதிகாரிகள் தெரிவித்தனர். சமீபத்தில் பஞ்சாப், அரியானா மாநிலங்களில் பருவம் தவறி பெய்த மழையினால் கோதுமை விளைச்சல் பாதித்தது என்றும், இதனால் அறுவடையும் ஒரு மாதம் கழித்த பிறகுதான் தொடங்கப்பட்டது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். இந்நிலையில் கொள்முதல் மையங்களுக்கு கோதுமையை விவசாயிகள் அதிகம் கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டு 25 மில்லியன் டன் மட்டுமே கொள்முதல் செய்த நிலையில் நடப்பு ஆண்டில் 31 மில்லியன் டன் கொள்முதல் செய்யப்படும் என்று எப்சிஐ அதிகாரிகள் சுட்டிகாட்டினர். நடப்பு ஆண்டில் 95.6 மில்லியன் டன் கோதுமை உற்பத்தியாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய உணவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,400 வழங்கப்படும் நிலையில் ராஜஸ்தான் மாநில அரசு போனஸ் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.150 வழங்குகிறது என்றும் நடப்பு ஆண்டில் கோதுமை கொள்முதல் 30 சதவீதம் அதிகரிக்கும் என்று ராஜஸ்தான் மாநில அதிகாரிகள் தெரிவித்தனர். கோதுமை கிடங்குகளில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 7 மில்லியன் டன் கோதுமை மட்டுமே இருந்தது. இந்நிலையில் மே.1ம் தேதி நிலவரப்படி 34.4 மில்லியன் டன் கோதுமை இருப்பதாக எப்சிஐ அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>சிறுதானியங்கள் உற்பத்தி அதிகரிக்க விழிப்புணர்வு முகாம்</u>**



**கேப்டவுன்**: உலகம் முழுவதும் துவரை, மொச்சை, உளுந்து உள்ளிட்ட சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க சர்வதேச அளவில் விழிப்புணர்வு

முகாம் நடத்தப்படவுள்ளது என்று உலக சிறுதானிய அமைப்பின் தலைவர் ஹக்கன் தெரிவித்துள்ளார். வரும் 2016 ஆண்டை, 'உலக சிறுதானிய ஆண்டு' ஆக அனுசரிக்க வேண்டும் என்று ஐநா அறிவித்துள்ளது. அதற்கேற்ப உலக முழுவதும் சிறுதானியங்களின் விளைச்சலை அதிகரிப்பது, அவற்றை பதப்படுத்தி பாதுகாப்பு, சிறு தானியங்களில் இருந்து உணவு வகைகளை தயாரிப்பதற்கான தொழிற்சாலை உள்ளிட்ட கட்டமைப்புகளை உருவாக்குவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஹக்கன் சுட்டிகாட்டினார்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ1 லட்சம் வங்கி கடன்

**வேலூர்**, : வேலூர் மாவட்ட சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் கண்காணிப்பாளர் ரூபி கூறியதாவது: வேலூர் மாவட்டத்தில் ஏராளமான சிறு குறு விவசாயிகள் உள்ளன. அவர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு ரூ.1 லட்சம் கடன் வழங்கப்படுகிறது.

கடன் பெற விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பத்துடன் நிலத்தின் சிட்டா, பட்டா, மற்றும் உரிமையாளரின் புகைப்படத்துடன் அடையாள அட்டை ஆகியவற்றின் நகல்களுடன் விண்ணப்பத்தை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். இதுவரை 500க்கும் மேற்பட்ட நபர்கள் விண்ணப்பங்களை அனுப்பி உள்ளனர். இந்த விண்ணப்பங்களை கலெக்டர் தலைமையில் சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் குழு அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள். அதில் குறிப்பட்டுள்ள தகவல் உண்மையாக இருப்பின் அடுத்த கட்டமாக விண்ணப்பதாரர்களுக்கு மின் வாரியத்தின் மூலம் இலவச மின்சாரம் வழங்கப்படும். பின்னர் வங்கியின் மூலம் அவர்களுக்கு ரூ.1 லட்சம் கடனாக வழங்கப்படும் என்றார்.

## வேலூர் மாவட்டத்தில் கொட்டியது மழை

வேலூர், வேலூர் மாவட்டத்தில் கோடை மழை கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல் ஓடியது. தமிழகத்தில் இந்த ஆண்டு கத்திரி வெயில் தொடங்கும் முன்பே வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, சென்னை

போன்ற நகரங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்தியது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை வேலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கன மழை பெய்தது. இரவிலும் பெய்த மழை நேற்று காலையும் தொடர்ந்தது. இதனால், வேலூரில் சீதோஷண நிலை மாறியது.

நகரின் தாழ்வான பகுதியில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. பல மாதங்களுக்கு பிறகு மழை பெய்ததால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். திடீர் மழையால் அக்னி வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. அதிகபட்சமாக ஆற்காட்டில் 40 மி.மீ மழை பதிவாகி இருந்தது. வேலூர் மாவட்டத்தில் நேற்று பெய்த மழை அளவு விவரம் வருமாறு: வேலூர் - 16 மி.மீ., ஆம்பூர் 10 மி.மீ., அரக்கோணம் 10.30 மி.மீ., குடியாத்தம் 3.30 மி.மீ., திருப்பத்தூர் 2.20 மி.மீ., வாணியம்பாடி 1.60 மி.மீ., வாலாஜா 31 மி.மீ., ஆலங்காயம் 3 மி.மீ., மேல்ஆலத்தூர் 3.20 மி.மீ., ஆற்காடு 40 மி.மீ., காவேரிப்பாக்கம் 11.20 மி.மீ.

## வண்டல் கூட்டுறவு வங்கியில் பயிர் காப்பீட்டு தொகை பட்டுவாடா

**இளையான்குடி**, : தினகரன் செய்தி எதிரொலியால் வண்டல் கூட்டுறவு வங்கியில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். சாலைக்கிராமம் அருகே வண்டல் தொடக்க வேளான்மை கூட்டுறவு வங்கி உள்ளது. இந்த வங்கியில் வடக்கு வண்டல், தெற்கு வண்டல், மரைக்கான் குடியிருப்பு, மாடக்கோட்டை, குறிச்சி, முத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்திருந்தனர். அதன்படி முத்துர் கிராமத்திற்கு 63 சதவீதமும், வண்டல் கிராமத்திற்கு 22 சதவீதமும் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் முத்தூரில் விவசாயம் செய்யும் விவசாயிகள் வண்டலில் குடியிருந்ததால் அவர்களுக்கு 22 சதவீத பணம் மட்டுமே தர முடியும் என வங்கி நிர்வாகம் கூறுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் புகார் அளித்தனர். இது குறித்து கடந்த மார்ச் 16 மற்றும் மே 5ம் தேதி தினகரனில் செய்தி வெளியானது. இதனைத் தொடர்ந்து விசாரனை செய்த மாவட்ட கூட்டுறவு வங்கி நிர்வாகம், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு உரிய சதவீத பயிர் காப்பீட்டு தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது. நேற்று முதல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

முறையாக பயிர் காப்பீட்டு தொகை பணம் பட்டுவாடா வண்டல் கூட்டுறவு வங்கியில் வழங்கப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**காளான் வளர்ப்பு பயிற்சி 33 பேருக்கு சான்றிதழ்**

**வில்லியனூர்**, : குருமாம்பேட் பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

கடந்த 6ம் தேதி மற்றும் 7ம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் நடந்த பயிற்சியில் புதுவை, கடலூர், சிதம்பரம், ஆரோவில், சென்னை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பெண்கள் உட்பட 33 பேர் கலந்து கொண்டனர்.

இதில் சிப்பி காளான், பால் காளான் ரகங்கள் வளர்க்க பயிற்சி அளிக்கப்பட்டது. காளானில் அடங்கியுள்ள சத்துகள், வளர்ப்பு முறைகள் மற்றும் பதபடுத்துதல், சமைக்கும் முறைகள் குறித்த பயிற்சி வழங்கினர். வளர்க்கும் காளான்கறை சந்தை படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகள் அவற்றை தீர்த்து சந்தை படுத்தும் வழிமுறைகள் விளக்கப்பட்டன.

பயிற்சிகளை நிலையத்தை சேர்ந்த மனையியல் வல்லுனர் விஜயலட்சுமி துணை பயிற்றுனர் பொம்மி ஆகியோர் அளித்தனர். பயிற்சியை முடித்தவர்களுக்கு நிலையத்தின் தலைவர் சுரேஷ் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

இது குறித்து அவர் கூறுகையில், கூடுதல் வருமானம் கிடைக்கக்கூடிய தொழில் காளான் வளர்ப்பு தொழிலாகும். இதற்காக வேளாண் நிலையத்தின் சார்பாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

எனவே அதனை வளர்ப்பதற்கு வேண்டிய தொழில்நுட்ப சந்தேகங்களுக்கு வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நீர்வரத்து அதிகரிப்பு எதிரொலி: முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்தது; 500 கன அடி தண்ணீர் திறப்பு**



**கூடலூர்,**

முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்தது. இதனால் அணையில் இருந்து வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

3 அடி உயர்வு

தேனி, மதுரை உள்ளிட்ட 5 மாவட்டங்களின் பாசன நீர் ஆதாரமான முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதை தொடர்ந்து அணைக்கு வரும் தண்ணீரின் அளவு நேற்று முன்தினம் 1,535 கன அடியாக உயர்ந்தது. தொடர்ந்து மழை பெய்து வந்ததால் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வந்தது.

நேற்று காலை நிலவரப்படி முல்லைப்பெரியாறு அணைக்கு வினாடிக்கு 6 ஆயிரத்து 649 கன அடி தண்ணீர் வந்தது. நேற்று முன்தினம் 111.10 அடியாக

இருந்த முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்து நேற்று காலை 114.40 அடியாக காணப்பட்டது. நீர்வரத்து அதிகரித்ததால் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையில் 1,627 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

<u>வைகை நீர்மட்டம்</u>

மேகமலை மற்றும் சுருளி அருவிகளில் தண்ணீர் அதிக அளவில் வருவதாலும், முல்லைப்பெரியாற்றில் கூடுதல் தண்ணீர் திறக்கப் பட்டுள்ளதாலும் வைகை அணைக்கு நீர்வரத்து அதி கரித்து வருகிறது. நேற்று முன் தினம் அணைக்கு வினாடிக்கு 180 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 272 கன அடியாக உயர்ந்தது. தொடர் நீர்வரத்து காரணமாக 21.06 அடியாக இருந்த வைகை அணை நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி உயர்ந்து 22.11 அடியாக காணப்பட்டது.

வைகை அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 40 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் நீர் இருப்பு 140 மில்லியன் கன அடியாக உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 30.60 அடியாக உயர்ந்தது. வினாடிக்கு 60 கன அடி நீர்வரத்தும், அணையில் இருந்து வினாடிக்கு 8 கன அடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 81.83 மில்லியன் கன அடியாக உள்ளது.

<u>வீரபாண்டியில் குளிக்க தடை</u>

கம்பம், உத்தமபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழை பெய்ததாலும், அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாலும் முல்லைப்பெரியாற்றில் தண்ணீர் அதிக அளவில் ஓடுகிறது. இதனால் வீரபாண்டி முல்லைப்பெரியாற்றில் பக்தர்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சோத்துப்பாறை அணைக்கு வரும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 257 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் 85.60 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 3 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் 44.58 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

முல்லைப்பெரியாறு அணை மற்றும் தேனி மாவட்டத்தில் பெய்த மழையளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:–

முல்லைப்பெரியாறு அணை–28, தேக்கடி– 51.4 மி.மீ., கூடலூர்– 41, சண்முகாநதி அணை–35, உத்தமபாளையம்– 59, வீரபாண்டி–26, வைகை அணை–15.4, மஞ்சளாறு அணை–48, சோத்துப்பாறை அணை–60.

## <u>இந்தியாவிலேயே முதன்முறையாக மாட்டுக்கு செயற்கை கால் பொருத்தி திருப்பூர் டாக்டர் சாதனை</u>



செயற்கை கால் பொருத்தப்பட்ட மாட்டுடன் பண்ணை உரிமையாளர் நிர்மலாஜெகதீசன்.

**திருப்பூர்,**

இந்தியாவிலேயே முதன்முறையாக மாட்டுக்கு செயற்கை கால் பொருத்தி திருப்பூர் டாக்டர் சாதனை படைத்துள்ளார்.

இந்த சாதனை குறித்து திருப்பூர் கால்நடை மருத்துவமனை டாக்டர் ராமச்சந்திரன் கூறியதாவது:-

<u>கால் முறிந்த மாடு</u>

திருப்பூர் பல்லடம் ரோட்டில் பனியன் ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வருபவர் நிர்மலா ஜெகதீசன். இவர் தனது தோட்டத்தில் உள்ள பண்ணையில் 60 மாடுகளை வளர்த்து வருகிறார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாடுகளை வேனில் ஏற்றி

சென்ற போது ஒருமாடு மிரண்டு வேனில் இருந்து கீழே விழுந்தது. இதில் அந்த மாட்டின் பின்புற வலது காலில் முட்டிக்கு கீழ் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு கால் எலும்பு உடைந்தது.

இதனால் அந்த மாட்டை திருப்பூர் அரசு கால்நடை மருத்துவமனைக்கு சிசிச்சைக்காக கொண்டு வந்தனர். அந்த மாட்டை பரிசோதித்த நான், கால் மிகவும் நசுங்கி உள்ளதால் இதை வெட்டித்தான் எடுக்க வேண்டும் என்று கூறினேன். ஆனால் அந்த மாட்டின் காலுக்கு இரும்பு தகடு (ஸ்டீல் பிளேட்) பொருத்தி பார்க்கலாமே என்று நிர்மலா ஜெகதீசன் சொன்னதை அடுத்து, அந்த வசதி திருப்பூரில் இல்லாததால் வேன் மூலம் அந்த மாட்டை நாமக்கல் கொண்டு சென்றோம்.

<u>செயற்கை கால்</u>

நாமக்கல்லில் மாட்டின் காலை பரிசோதித்த டாக்டர்கள் கால் மிகவும் நசுங்கி போய் உள்ளதால் அந்த காலை வெட்டி எடுப்பதை தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்தனர். அதைத்தொடர்ந்து அந்த மாட்டின் கால் முழங்காலுக்கு கீழ் வெட்டி எடுக்கப்பட்டது. பின்னர் 3 கால்களுடன் நடக்க முடியாமல் அவதிப்பட்டு வந்த அந்த மாட்டுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அந்த மாட்டுக்கு செயற்கை கால் பொருத்த முடியுமா? என்று விவாதிக்கப்பட்டது. பின்னர் இணைய தளத்தில் தேடியதில் ஐரோப்பாவில் யானை மற்றும் நாய்க்கு செயற்கை கால் பொருத்தப்பட்டு உள்ளது தெரிய வந்தது. அதைத்தொடர்ந்து ஜெய்ப்பூரில் உள்ள மனிதர்களுக்கான செயற்கை கால் தயாரிக்கும் நிறுவனத்தை தொடர்புகொண்டோம். அங்கு கால்நடைகளுக்கு செயற்கை கால் தயாரிப்பதில்லை என்று கூறியதைத் தொடர்ந்து நாக்பூரில் உள்ள ஒரு செயற்கை கால் நிறுவனத்தை அணுகினோம்.

அவர்களும் இதுவரை விலங்குகளுக்கு செயற்கை கால் பொருத்தியதில்லை. எதற்கும் முயற்சி செய்து பார்க்கிறோம் என்று கூறினர். பின்னர் திருப்பூருக்கு வந்த குழுவினர் மாட்டின் காலை அளவெடுத்து, கால் போன்ற ஒரு வார்ப்பை (மோல்டு) செய்து எடுத்துச்சென்றனர்.

<u>இந்தியாவிலேயே முதன்முறையாக</u>

பிறகு 1½ மாதங்கள் கழித்து செயற்கை காலுடன் நாக்பூர் குழுவினர் கடந்த 5 நாட்களுக்கு முன் திருப்பூர் வந்தனர். திருப்பூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் நாகராஜ் முன்னிலையில் மாட்டின் காலில் சிறியதாக ஒரு அறுவை சிகிச்சை செய்து அந்த செயற்கை காலை பொருத்தினோம். பின்னர் அந்த மாட்டை தூக்கி நிறுத்தினோம். மாடு எப்போதும் போல நன்றாக நின்றது. பின்னர் மெதுவாக நடக்கவைத்தோம். அப்போது மாடு சற்று சிரமப்பட்டு நடந்தது. அறுவை சிகிச்சை செய்ததால் ஏற்பட்டுள்ள புண் ஆறினால் மாடு நன்றாக நடக்கும். இன்னும் ஒரு மாதத்தில் மற்ற மாடுகளை போலவே இந்த மாடும் நன்றாக நடக்கும் என்று நம்புகிறோம். இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாட்டுக்கு செயற்கை கால் பொருத்தப்பட்ட சம்பவம் ஒரு மிகப்பெரிய சாதனை என்று சொல்லலாம்.இவ்வாறு டாக்டர் ராமச்சந்திரன் தெரிவித்தார். அப்போது பண்ணை உரிமையாளர் நிர்மலா ஜெகதீசன் உடன் இருந்தார்.

**<u>3-வது நாளாக மழை நீடிப்பு; ஏற்காட்டில் வாட்டி வதைக்கும் குளிர் ஆத்தூரில் அதிகபட்சமாக 43.6 மி.மீ. பதிவு</u>**



இடைப்பாடியில் பலத்த மழை பெய்ததால் புதிய பஸ் நிலையத்தில் மழைநீர் தேங்கி கிடக்கும் காட்சி.

**சேலம்,**

சேலம் மாவட்டத்தில் 3-வது நாளாக நேற்று பரவலாக மழை பெய்தது. ஆத்தூரில் அதிகபட்சமாக 43.6 மி.மீ. மழை அளவு பதிவாகியிருந்தது.

## மழை நீடிப்பு

வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் சேலம், ஏற்காடு, மேட்டூர், சங்ககிரி, இடைப்பாடி, ஓமலூர் உள்பட மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்தது. சேலத்தில் நேற்று முன்தினம் இரவு விடிய விடிய மழை பெய்து கொண்டே இருந்தது. இந்த சாரல் மழையால் இரவு முழுவதும் கடுமையான குளிர் நிலவியது. ஏற்காட்டில் பெய்த பலத்த மழையால் மலைக்கிராமங்களில் மின் இணைப்பு அடியோடு பாதிக்கப்பட்டது. சேலத்தில் நேற்று அதிகாலை வரையிலும் மிதமான சாரல்மழை பெய்தது.

இதேபோல், வாழப்பாடி, ஆத்தூர், தம்மம்பட்டி, சங்ககிரி, இடைப்பாடி, மேட்டூர், ஓமலூர் பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. ஏற்காட்டில் நேற்று காலையில் லேசான சாரல் மழை பெய்து கொண்டே இருந்ததால் வழக்கத்தைவிட அதிகமான குளிர் நிலவியது. அண்ணாபூங்கா, படகு இல்லம் உள்ளிட்ட பகுதி பனிமூட்டத்தால் மூழ்கியிருந்ததை காணமுடிந்தது. ஏற்காட்டில் பகல் மற்றும் இரவு நேரங்களிலும் கடுமையான குளிர் பொதுமக்களை வாட்டி வதைக்கிறது. சுற்றுலா பயணிகளின் வரத்தும் குறைவாக காணப்பட்டது. சேலம் மாவட்டத்தில் 3-வது நாளாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் அந்தந்த பகுதியில் உள்ள ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

## மேட்டூர்-இடைப்பாடி

கத்திரிவெயில் தொடங்கியதும் கடும் வெப்பத்தால் அவதிப்பட்டு வந்த மேட்டூர் சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு தற்போது பெய்து வரும் மழையால் சற்று ஆறுதல் கிடைத்துள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இடைப்பாடி பகுதியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது. அதை தொடர்ந்து தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பஸ் நிலையம் பகுதியில் முழங்கால் அளவுக்கு மழைநீர் தேங்கியது. நேற்று மதியம் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதைத்தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சேலம் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:- சேலம்-10.8, ஏற்காடு-28.8, வாழப்பாடி-23.6, ஆத்தூர்-43.6, தம்மம்பட்டி-25.4, சங்ககிரி-10.2, இடைப்பாடி-6.2, மேட்டூர்-12.4, ஓமலூர்-14.

**பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதி விவசாயிகள் மொத்தம் 1,999 மூட்டைகளில் 93 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று குறைந்தபட்ச விலையாக 104 ரூபாய் 10 காசுக்கும் அதிகபட்ச விலையாக 106 ரூபாய் 25 காசு வரையும் ஏலம் போனது.

2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ குறைந்தபட்ச விலையாக 60 ரூபாய் 45 காசுக்கும், அதிகபட்ச விலையாக 103 ரூபாய் 55 காசுக்கும் விற்பனையானது. இந்த விலை கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தை விட கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூடுதலாகும். மொத்தம் கொப்பரை தேங்காய் ரூ.1 கோடிக்கு ஏலம் போனது.

**திருப்பூர் மாவட்டத்தில் 2 நாட்களில் 44 செ.மீ. மழை**



திருப்பூர் மாவட்டத்தில் 2 நாட்களில் 44 சென்டி மீட்டர் மழை பெய் துள்ளதால் விவ சாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ள னர்.

பலத்த மழை

திருப்பூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கடந்த 2 நாட்களாக பலத்த காற் றுடன் கூடிய கன மழை பெய் தது. இதன் காரணமாக, பல இடங்களில் தண்ணீர் குளம் போல் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில் அதிக பட்சமாக மூலனூரில் 11.2 சென்டி மீட்டர் மழையும், காங்கயத்தில் 8.8 சென்டி மீட்டர் மழையும் பெய்தது. குறைந்த பட்சமாக திருப்பூரில் 2.9 சென்டி மீட்டர் மழை பெய்தது.

44 சென்டி மீட்டர் மழை

திருப்பூர் மாவட்டத்தில் அவினாசி, திருப்பூர், உடு மலை, பல்லடம், தாராபுரம், காங்கயம், மூலனூர் ஆகிய பகுதிகளில் கடந்த 2 நாட் களில் மொத்தம் 44 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது. இதன் சராசரி அளவு 6.29 சென்டி மீட்டர் ஆகும்.

இந்த நிலையில் நேற்றும் காலை முதல் மாலை வரை அவ்வப்போது மழை பெய் தது. இந்த மழையால் திருப்பூர் பூ மார்க்கெட் வீதி, மாநக ராட்சி அலுவலகம் எதிரில், மேம்பாலம், புஷ்பா தியேட் டர், காங்கயம் ரோடு, மங்கலம் ரோடு, எஸ்.ஆர்.நகர், குளத் துப்புதூர், அனுப்பர் பாளையம், பெரியார் காலனி,

அங்கேரிபாளையம் உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை நீர் குளம்போல் தேங்கி நின்றது. இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள் அவதிய டைந்தனர்.

<u>பொதுமக்கள் மகிழ்ச்சி</u>

கடந்த சில மாதங்களாக வெயில் சுட்டெரித்து வந்த நிலையில், கடந்த 3 நாட்களாக பெய்து வரும் மழையால், திருப்பூர் நகரத்தில் வெப்பம் தணிந்தது. தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசி வருவ தால் மக்கள் மகிழ்ச்சி அடைந் தனர்.

மேலும் கடந்த 13 மாதங் களாக வறட்சியின் பிடியில் சிக்கித்தவித்த திருப்பூர் மாவட் டத்தில் தற்போது மழை பெய்து வருவதால் விவசாயி களும் மகிழ்ச்சி அடைந்து கோடை உழவை தொடங்கி உள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட் டரில்) வருமாறு:-

அவினாசி-25, திருப்பூர்-5, உடுமலை-5.4, பல்லடம்-4, தாராபுரம்-23, காங் கயம்-17.20, மூலனூர்-36, மொத்தம்-115.6.

## <u>தஞ்சை மாவட்டத்தில் மழை நீடிப்பு அணைக்கரையில் அதிகபட்சமாக 73 மி.மீ. பதிவானது</u>



தஞ்சை மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது. அணைக்கரையில் அதிகபட்சமாக 73 மில்லி மீட்டர் மழை பதிவானது.

## கேடை மழை

தமிழகத்தில் கோடை காலத்தில் வெயில் வாட்டி வதைத்தது. இதனால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இந்த நிலையில் கோடை வெயிலின் உச்சகட்டமான அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் காலத்திலும் அதிக அளவில் வெயிலின் தாக்கம் இருக்கும் என கூறப்பட்டது.

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முதல்நாள் லேசான மழை பெய்தது. அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஆனால் மழை பெய்யவில்லை. இந்த நிலையில் அரபிக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

## 4–வது நாளாக நீடிப்பு

தஞ்சை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மழை பெய்தது. நேற்று 4–வது நாளாகவும் மழை நீடித்தது. நேற்று காலை பலத்த மழை பெய்தது. தொடர்ந்து விட்டு, விட்டு மழை பெய்தது. அவ்வப்போது வெயிலும் தலைகாட்டியது. இந்த நிலையில் மதியம் 1.30 மணி அளவிலும் மழை கொட்டியது. இதே போல் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பரவலாக மழை பெய்தது. ஒரு சில இடங்களில் பலத்த மழையும் கொட்டியது.

தஞ்சை மாவட்டத்தில் கோடைமழை தொடர்ந்து பெய்து வருவது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த மழை தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெல் பயிருக்கும், எள், உளுந்து பயிருக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது.

## மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

அதிராம்பட்டினம் 37.6, கல்லணை 42, கும்பகோணம் 45.5, பாபநாசம் 23, தஞ்சாவூர் 9.6, திருவையாறு 10, திருக்காட்டுப்பள்ளி 9.2, வல்லம் 8, அணைக்கரை 73, அய்யம்பேட்டை 21, திருவிடைமருதூர் 72, மஞ்சளாறு 68, நெய்வாசல்

தென்பாதி 51, பூதலூர் 15.2, வெட்டிக்காடு 27, ஈச்சன்விடுதி 36, ஒரத்தநாடு 13, மதுக்கூர் 37.4, பட்டுக்கோட்டை 30, பேராவூரணி 22.2, குருங்குளம் 13.

**<u>கொட்டி தீர்த்தது கோடை மழை அதிகபட்சமாக குடவாசலில் 102 மில்லி மீட்டர் பதிவானது</u>**



திருவாரூர் மாவட்டத்தில் கோடை மழை கொட்டி தீர்த்தது. நேற்று குட வாசலில் அதிக பட்சமாக 102 மில்லி மீட்டர் பதி வானது.

<u>கோடை மழை</u>

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களாக வெயில் வாட்டி வதைத்து வந்தது. கடந்த 30-ந் தேதி மாவட்டம் முழுவதும் கோடை மழை பெய்ய தொடங்கியது. அதைதொடர்ந்து வெயிலின் தாக்கம் குறைய தொடங்கியது.

4-ந் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் மாவட் டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதை தொடர்ந்து வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை குமரி கடலில் வலுவடைந்து, நேற்றுமுன் தினம் கரையை கடந்தது.

இதன் காரணமாகவும் வங்க கடலில் ஈரப்பதம் மிகுந்த காற்று ஈர்ப்பின் காரணமா கவும் தொடர்ந்து 3 நாட் களுக்கு கன மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. அதன்படி திருவாரூர் மாவட் டத்தில் நேற்றுமுன்தினம் மாலை தொடங்கிய மழை நேற்று மதியம் வரை விடாமல் பெய்தது.

சூறைக்காற்றுடன் மழை

முத்துப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி களில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் சூறை காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் அப்பகுதியில் நேற்று காலை 8 மணி வரையில் மின்சாரம் தடை செய்யப்பட்டு இருந்தது. இதேபோல் திருத் துறைப்பூண்டி, முத்துப் பேட்டை, வலங்கைமான் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் விடிய, விடிய மழை பெய்தது. இதனால் அப் பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல் தேங்கி நின்றது.

நீடாமங்கலம் பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

தொடர்ந்து பெய்து வரும் கோடை மழை விவ சாயத்திற்கு ஏற்றது என விவசாயிகள் மகிழ்ச்சி கொண்டிருந்தாலும் சில இடங்களில் கோடை சாகுபடி செய்யப்பட்டிருந்த அறுவடைக்கு தயாராக உள்ள கதிர் முற்றிய நெல் பயிர்கள் சாய்ந்தன.

மழை நிலவரம்

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத் தில் குடவாசலில் அதிக பட்சமாக 102 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தின் மற்ற பகுதி களில் மழைப்பொழிவு விவரம் மில்லி மீட்டர் அளவுகளில் வருமாறு:-

முத்துப்பேட்டை- 75, திரு வாரூர்- 73, நீடாமங்கலம்- 59, பாண்டவையாறு தலைப்பு -58, மன்னார்குடி-56, திருத் துறைப்பூண்டி-55, வலங்கை மான்-50, நன்னிலம்-48.

மாவட்டத்தில் நேற்று சரா சரியாக 64 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மொத்த மழை அளவு 578 மில்லி மீட்டர் ஆகும்.

நீடாமங்கலம் அருகே உள்ள கோரையாறு தலைப்பில் பெய்த மழையின் அளவு 55 மில்லிமீட்டராகும்.

**<u>கோடை மழையால் பருத்தி மகசூல் அதிகரிக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



**நன்னிலம்,**

கோடை மழையால் பருத்தி மகசூல் அதிகரிக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

<u>பருத்தி சாகுபடி</u>

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது கோடை சாகுபடி நடைபெற்று வருகிறது. ஆற்றில் நீர் வரத்து குறைந்ததை தொடர்ந்து மின்மோட்டார் மூலம் வயலுக்கு நீர் இரைத்து விவசாயிகள் கோடை சாகுபடி பணிகளில் ஈடுபட்டு வந்தனர். நெல், பருத்தி மற்றும் பயறு வகை பயிர்கள் கோடை காலத்தில் பயிர் செய்யப்பட்டு இருந்தன.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கோடை காலத்தையொட்டி 820 எக் டேரில் பருத்தி பயிர் செய்யப் பட்டு இருந்தது. நன்னிலத்தில் கடந்த 2 நாட்களாக பெய்த கோடை மழையால் பருத்தி பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து பருத்தி விவசாயி வெங்கட்ராமன் கூறியதாவது:-

<u>மகிழ்ச்சி</u>

ஆற்றுப்பாசனம் செய்ய முடியாத நிலையில் கோடை பருவத்தில் பருத்தி சாகுபடி செய்து இருந்தோம். வெயில் வாட்டி வதைத்ததால் பருத்தி பயிர்களுக்கு

தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் மகசூல் பாதிக்கும் நிலை இருந்தது. இந்த நிலை யில் 2 நாட்களாக தொடர்ந்து கோடை மழை பெய்து உள்ளது. இது பருத்தி பயிர்களுக்கு ஏற்றதாகும். இந்த மழையால் மகசூல் அதிகரிக்கும். தண்ணீர் இரைக்க ஆகும் செலவும் குறையும். கோடை மழை பருத்தி விவசாயிகளை மகிழ்ச்சி அடைய செய்துள் ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடைகளின் தீவனத்திற்காக வைக்கோல், புல் கட்டு விற்பனை தீவிரம்**



**திருவரங்குளம்,**

திருவரங்குளம் வட்டார பகுதிகளில் மழையின்றி வறட்சி நிலவியதால் ஆடு, மாடுகளுக்கான தீவனத்திற்கும் கடும் தட்டுப் பாடு ஏற்பட்டது. தற்போது கடந்த 2 நாட்களாக இப்பகுதியில் பெய்து வரும் அடைமழையினாலும் ஆடு, மாடுகளுக்கு தீவனம் கிடைக்காத நிலை இருந்தது. இந்த நிலையில் தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி பகுதியில் இருந்து அறுவடை செய்து கூளமாகிப்போன வைக்கோலை, வியாபாரிகள் மிகவும் லாவகமாக அளவுக்கு ஏற்றவாறு பண்டல், பண்டலாக கட்டி டிராக்டரில் ஏற்றி வந்து ஒரு கட்டு ரூ.150–க்கு விற்பனை செய்து வருகின்றனர். விவசாயிகளும் வேறு வழியின்றி வைக்கோலை வாங்கி வீட்டில் பாதுகாத்து வைத்து மாடுகளுக்கு வழங்கி வருகின்றனர். மேட்டுப்பட்டி, திருவரங்குளம், வம்பன் 4 ரோடு, கைக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் வைக்கோல் விற்பனை தீவிரமாக நடைபெற்றது. மேலும் திருவரங்குளம் அருகே மேட்டுப்பட்டி மருப்பிணி ரோட்டில் பல ஏக்கர் பரப்பளவில் புல் பண்ணை அமைந்துள்ளது. இங்கிருந்து புல் அறுத்து, புதுக்கோட்டை வட்டார பகுதிகளுக்கு உடனுக்குடன்

வழங்கப்பட்டு வருகின்றது. வறட்சியின் காரணமான பல நாட்களாக புல் அறுவடையாகாமல் இருந்தது. தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக புல் விற்பனை மீண்டும் தொடங்கியுள்ளது. கால்நடைகள் தீவத்திற்காக, பொதுமக்கள் அவற்றை வாங்கிச் செல்கின்றனர்.

**கரூர் மாவட்டத்தில் 3 நாட்களாக பரவலான மழை விவசாயிகள் மகிழ்ச்சி**



**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

3 நாட்களாக மழை

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் கடந்த 2 நாட்களாக கரூர் மாவட்டம் முழுவதும் காலை முதல் மதியம் வரை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டு மழை பெய்யத்தொடங்கியது. நேரம் ஆக, ஆக நல்ல மழை பெய்தது.

இதே போன்று நேற்று முன் தினம் காலையிலும் மழை தூறல் இருந்து கொண்டே இருந்தது. பின்னர் காலை 10 மணி அளவில் நல்ல மழை பெய்தது. சில நேரங்களில் கன மழை பெய்தது. நேற்றும் காலையில் தூறல் இருந்து கொண்டே இருந்தது. பின்னர் மதியம் நல்ல மழை பெய்தது.

<u>மழை அளவு விவரம்</u>

கரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

அரவக்குறிச்சி–29.20, க.பரமத்தி– 39.20, குளித்தலை– 19, மாயனூர்–30, கரூர்–26, அணைப்பாளையம்–51.20, தோகைமலை–25, பஞ்சப்பட்டி– 33.20, பாலவிடுதி–45.10, கடவூர்–37.40, கிருஷ்ண ராயபுரம்31, மைலம்பட்டி–45. மொத்தம்–411.30.சராசரி– 34.28. கடந்த 2 நாட்களாக பெய்த மழையால் கரூர் மாவட்டத் தில் பல்வேறு இடங்களில் சாலை ஓரங்களில் தண்ணீர் தேங்கி சேறும் சகதியுமாக காணப்படுகிறது. பல இடங்களில் தண்ணீர் தேங்கி கிடக்கிறது. இந்த மழையினால் விவ சாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**<u>திண்டுக்கல் மாவட்டத்தில் ஆடி பட்டத்திற்கான உழவு பணிகள் தீவிரம்</u>**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் பெய்து வரும் புயல் மழையால், மாவட்டத்தின் பல்வேறு கிராம பகுதிகளில் ஆடி பட்டத்திற்கான உழவு பணிகள் தீவிரம் அடைந்துள்ளன.

<u>பொய்த்து போன பருவ மழை</u>

திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக பருவ மழை பொய்த்து போனது. இதனால் ஆறு, குளங்கள் வறன்டன. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நிலத்தடிநீர் மட்டம் ஆயிரம் அடிக்கும் கீழே சென்று விட்டது. குடிநீர் தட்டுப்பாட்டை சந்திக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இதற்கும் ஒரு படி மேலே போய், விவசாய பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. ஆடு, மாடுகளுக்கு கூட தீவனம் இன்றி கால்நடைகளை வந்த விலைக்கு விற்கும் பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

கைகொடுத்த புயல்மழை

இந்நிலையில் கடந்த 2 தினங்களாக தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. 2 சென்டி மீட்டர் முதல் 4 சென்டி மீட்டர் வரை மழை பெய்துள்ளது. காய்ந்து கிடந்த தரிசு நிலங்கள் மழை நீரால் குளிர்ச்சியடைந்துள்ளன. இப்போது தான் ஆங்காங்கே மழைநீர் தேங்க ஆரம்பித்துள்ளது. இனி நிலத்தடிநீர் மட்டம் ஓரளவிற்கு உயரும் என நம்பிக்கை பிறந்துள்ளது. மழை நீரால் பூமி முற்றிலும் குளிர்ந்து போனது. இரவில் குளிர் காற்று வீசுவதால் புழுக்கம் குறைந்துள்ளது.

உயிர் பிழைத்த தென்னைகள்

இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் பெரு மகிழ்ச்சியடைந்துள்ளனர். பல்வேறு கிராம பகுதிகளில் ஆடிப்பட்டத்திற்கான உழவு பணிகளை தொடங்கி விட்டனர். இதுகுறித்து தேத்தாம்பட்டி சொரிக்கான் மேடு பகுதி விவசாயி ஒருவர் கூறியதாவது:-

கடந்த 2 நாட்களில் 2 உழவு மழை பெய்திருக்கிறது. ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் குருத்து காய்ந்து போய் கீழே விழும் நிலையில் இருந்தது. மழை பெய்ததால் தென்னை மரங்கள் பிழைத்துக்கொண்டன. இன்னும் 2 நாட்கள் இதுபோல் மழை பெய்தால் இந்த வருடத்தை ஓரளவிற்கு சமாளித்து கொள்ளலாம் என்னும் நிலை வந்து விட்டது.

ஆடிப்பட்டம்

இந்த மழையால் தரிசாய் கிடந்த நிலங்கள் குளிர்ந்துள்ளன. இந்த சூழ்நிலையை வீணாக்காமல் ஆடிப்பட்டத்திற்கான உழவு பணிகள் தொடங்கி விட்டோம். இதற்கு சித்திரை காட்டு உழவு என்று பெயர். இப்போது உழுது எரு போட்டால் தான் அது மட்கும். ஆடி மாதத்தின் முதல் வாரத்தில் மீண்டும் உழுது விதை போட்டால் போதும். ஒன்றிரண்டு மழை விட்டு, விட்டு பெய்தால் கூட விதைகள் நன்கு முளைத்து பலன் கொடுக்கும். மானாவாரி பயிரான கம்பு, சோளம், மக்காச்சோளம், மொச்சை, தட்டைப்பயிறு போன்றவை பயிரிட உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**கூடலூர் பகுதியில் முட்டைக்கோஸ் விளைச்சல் அமோகம்**



**கூடலூர்,**

கூடலூர் பகுதியில் முட்டைக் கோஸ் விளைச்சல் அதிகரித்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

முட்டைக்கோஸ் சாகுபடி

தேனி மாவட்டம் கூடலூர் மேற்கு தொடர்ச்சி மலையடி வாரத்தை ஒட்டிய பகுதி களான கழுதைமேடு, சரித்திரவு, காக் கான் ஓடை, காஞ்சிமரத்துறை ஆகிய பகுதிகளில் முட்டைக் கோஸ் அதிக அளவில் பயிரிடப் பட்டுள்ளது. சாகுபடி செய்யப் பட்டதில் இருந்து 90 முதல் 100 நாட்களில் மகசூல் கிடைக்கும். ஆனால்

தற்போது பயிரிடப் பட்டு 80 நாட்களே ஆன நிலை யில் முட்டைக்கோஸ் நன்றாக வளர்ச்சி அடைந்துள்ளது. குறைந்த காலத்தில் மகசூல் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதையடுத்து உள்ளூர் வியா பாரிகள் மற்றும் கம்பம், சின்ன மனூர் வாரச் சந்தை வியாபாரி கள் நேரடியாக வந்து முட்டைக் கோசை கொள்முதல் செய்து வருகின்றனர்.

<u>அறுவடை பணிகள்</u>

சில வியாபாரிகள் பணத்தை விவசாயிகளிடம் கொடுத்து விட்டு முட்டைக்கோசை அறு வடை செய்து வாங்கி செல்கின்றனர். அறுவடை செய்யப்பட்ட முட்டைக் கோஸ்கள் லாரிகள் மூலம் மதுரை காய்கறி மார்க் கெட்டுக்கு கொண்டு செல்லப் படுகின்றன. தற்போது முட்டைக் கோஸ் கிலோ ரூ.7-ல் இருந்து ரூ.10 வரை விற்பனை ஆகிறது. கடந்த ஆண்டுகளில் மழை, குளிர் காலங்களில் அழுகல் நோய் தாக்கி முட்டைக்கோஸ் சாகுபடி செய்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஆனால் இந்த ஆண்டு மழை சரிவர பெய்யாத நிலையிலும், சொட்டுநீர்ப்பாசனத்தின் மூலம் அதிக மகசூல் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**<u>சிவகங்கையில் 66 மில்லி மீட்டர் மழை பதிவு கண்மாய்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**



**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் 6–வது நாளாக நேற்றும் மழை நீடித்தது. அதிகபட் சமாக சிவகங்கையில் 66 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. கண் மாய், ஊரணிகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள் ளது.

<u>தொடர் மழை</u>

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 3–ந்தேதி முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த 6 நாட்களாக இரவு–பகலாக மழை பெய்து வருவதால், மாவட்டத்தில் வறண்டு கிடந்த கண்மாய், ஊரணிகளில் தண்ணீர் பெருக தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் இரவு முழு வதும் விடாது மழை பெய் தது.

நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பதிவான மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

காரைக்குடி 41.2, மானா மதுரை 60, சிவகங்கை 66, திருப்புவனம் 58.2, திருப் பத்தூர் 35, இளையான் குடி 47, தேவகோட்டை 47.2. மாவட்டத்தில் அதிகபட்சமாக சிவகங்கையில் 66 மில்லி மீட்டரும், குறைந்த அளவாக திருப்பத்தூரில் 35 மில்லி மீட்டரும் மழை பதிவாகி யுள்ளது.

<u>மழை அளவு அதிகரிப்பு</u>

சிவகங்கை நகரை பொறுத்த மட்டில் கடந்த 4 நாட்களாகவே மழையின் அளவு அதிகரித்து வருகிறது. கடந்த 5–ந்தேதி அன்று 25 மில்லிமீட்டரும், 6–ந்தேதி அன்று 37 மில்லி மீட்டரும், 7–ந்தேதி 35 மில்லி மீட்டரும், 8–ந்தேதி 66 மில்லி மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

சிவகங்கை நகர் தெப்பக்குளத்திற்கு செல் லும் வரத்து கால்யை சீரமைத்து மழை நீர் தடை யின்றி செல்ல நடவடிக்கை எடுக்கும்படி கலெக்டர் ராஜா ராமன் நகராட்சி ஆணையா ளர் சரவணனுக்கு உத்தரவிட் டார்.

இதைத்தொடர்ந்து நக ராட்சி ஊழியர்கள் நேற்று வரத்துக்கால்வாய் சீரமைக்கும் பணியில்ஈடுபட்டனர்.

நேற்று மதியமும் சிவகங்கை நகரில் மழைபெய்தது. இந்த மழை யால் சிவகங்கை பகுதி யில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மானாமதுரை

மானாமதுரை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையால் இப்பகுதி கண்மாய், ஊரணி களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

மானா மதுரை அரசு ஆஸ்பத் திரி தாழ்வான பகுதியில் இருப்ப தால் வெளி நோயாளி கள் பிரிவு, சித்த மருத்துவ பிரிவு முன்பு தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால் நோயாளி கள் ஆஸ்பத்திரிக்குள் செல்ல சிரமம் அடைந்து வருகின்ற னர்.

மானாமதுரை குலாளர் தெருவில் மண்பாண்ட தொழிற் கூடத்தில் மழை நீர் தேங்கி நிற்கிறது. இதனால் மண்பாண்ட பொருட்கள் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. மானாமதுரை சுந்தரபுரம் கடைவீதில் உள்ள ரோடு குண்டும், குழியுமாக காணப் படுகிறது.

சித்திரை திருவிழாவை யொட்டி மானாமதுரையில் உள்ள வைகையாற்றுக்குள் கடைகள் போட முடியாமல் வியாபாரிகள் தவித்து வரு கின்றனர்.

கோடை மழையால் மகிழ்ச்சி அடைந்த விவ சாயிகள் தங்களது நிலத்தை விவசாயம் செய்ய தயார் படுத்தி வருகின்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தின் உட்புறப் பகுதிகளில் மழை நீடிக்கும் வாய்ப்பு: வானிலை மையம் தகவல்

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அடுத்த 48 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் ஞாயிற்றுக் கிழமை உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, தீவிர காற்றழுத்த பகுதியாக உள்ளது. இது வட மேற்கு திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. தென் கேரள கடற்கரையோரத்திலிருந்து வடக்கு திசையில் நகர்ந்து, தற்போது தென்கிழக்கு அரபிக் கடலில், வட கேரளம் அருகே உள்ளது. இது மேலும் தீவிரமாகி வட கிழக்கு திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், அடுத்த 48 மணி நேரத்தில் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பல இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம். கடலோர மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் ஒரு சில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் வியாழக்கிழமை அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 13 செ.மீ. மழை பெய்தது. சிதம்பரம், குன்னூர் ஆகிய இடங்களில் 12 செ.மீ., கமுதி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 11 செ.மீ., கொடவாசல், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் 10 செ.மீ., மழை பெய்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரி கடற்கரையோரத்தில் கடல் காற்று 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வேகம் வரை வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.